Registered a sa News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 14 ( 27 - 03 - 1992 ) வெள்ளிக்கிழமை ஓசை: 38

## அரசாங்கபாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

இலங்கை முழுவதும் உள்ள அரசாங்க பாடசாலைகளில் 15 ஆயிரம் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக கலாசார தகவல்துறை அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார். இலங்கை முழுவதிலுமுள்ள 9,800 அரசாங்க பாட சாலைகளில் 1,82,000 ஆசிரியர்கள்இருக்க வேண்டும் எனவும் தற்பொழுது 1,69,667 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். புதிதாக [8 ஆம் பக்கம் பார்க்க]

# ராணுவம் எதிர்கொள்ளும் பேரிழப்பு

# யுத்த தந்திரோபாயம் பின்னடைவு

(கொழும்பு)

கடந்த சில மாதங்களாக விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான, இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்தும் அதிரடித் தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவ வட்டாரங்களைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன. தற்பொழுது உள்ள இராணுவ யுத்த தந்திரோபாயம் புலிகளின் அதிரடித் தாக்குதலினால் தோல்வி கண்டுள்ளது. இந்த நிலையில், புலிகளுக்கு எதிரான புதிய யுத்த தந்திரோபாயம் பற்றி இராணுவ வட்டாரங்கள் தீவிரமாகச் சிந்தித்து வருவதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது

புலிகளின் அதிரடித் தாக்குதலினால், இராணுவத் தரப்பிற்கு பாரிய இழப்புக்கள் ஏற்படுவதை சிறிலங்கா இராணுவப் பேச்சாளரி கேணல்முனசிங்கா நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் மறைமுகமாக ஏற்றுக்கொண்டார். இராணுவம் தாக்குதல்களில் ஈடுபடும்போது இராணுவத்திற்குப் பலத்த உயிரிழப்புக்கள் ஏற்படுவதாக எழுந்திருக்கும் செய்தியை அவர் ஒப்புக்கொண்டார். மணலாற்றுப்போரில் பல வாகனங்கள் சேதமடைந்ததையும் அவர் ஏற்றுக்கொண்டார். [8 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் - ஆயர்கள் இன்று சந்திப்பு

கத்தோலிக்க துறவிகள் குழுவினர் இன்றுகாலைவிடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்கள் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் புலிகள் தரப்பில் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வார்கள் எனத் தெரியவருகிறது யாழ் பிரஜைகள் குழுவையும் சந்தித்துக் குழுவினர் இன்று பேசுவார்கள்.

இதே வேளை பிற்பகலில் குழுவினர் கொழும்பு திரும்புவார்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது

## யாழ் வந்த ஆயர்குழு பல தரப்பினருடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்று மூன் தினம் காலை யாழ்ப்பாணம் வந்தடைந்த கத்தோலிக்க சமயத் துறவிகள் குழு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து இனப்பிரச்சினை குறித்து ஆலோசனை கலந்து வருகிறது

நேற்று மூன்தினம் இக் குழுவினர் கொழும்புத்துறைபுனித சவேரியார் ஸெமினரியில் கத்தோலிக்க மதகுருமார் மற்றும் குருத்துவ மாணவர்களையும் சந்தித்துப் பேசினர். நேற்று யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்சங்கம், பல்கலைக்கழக உபவேந்தர், விரிவுரையாளர் மற்றும் அதி. வண. ஆயர் அம்பலவாணர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர்

துறவிகள் குழுவில், இக்குழு யாழ்ப்பாணம் வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட இலங்கை கத்தோலிக்க துறவிகள் சங்கத் தலைவர் வண அல்பிறெட்அலெக்ஸ் சாண்டர் உட்பட சிலாபம் மறை மாவட்ட ஆயர் அதி. வண.மர்கஸ்பெர்னாண்டோ கண்டி மறை மாவட்ட ஆயர் [8 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி ஓர் அணையாததீபம்

-- தமிழன்பன்

(யாழ்ப்பாணம்)

''இந்திய, சிறிலங்கா அரசுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுககு எதிராக அகிம்சைப் போராட்டம் நடத்தி தியாக மரணமடைந்த அன்னை பூபதி தமிழீழ மண்ணின் வரலாற்றில் அணையாத தீபங்களில் ஒன்று''

இவ்வாறு நேற்று மாலை சாவற்காடு வைரவர் ஆலய மைதானத்தில் இடம்பெற்ற அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு அஞ்சலிஉரை நிகழ்த்திய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் அவர்கள் கூறினார்.

நூற்றுக்கணக்கான மக்கள் குழுமியிருந்த இந்த அஞ்சலிக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது இந்திய, [8 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டமும் உண்ணாவிரதமும்

தியாகச்சுடர் அன்னைபூபதியின் நினைவாக பருத்தித்துறை வட்டவைப் பிரிவில் உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று வியாபாரி மூலை பிள்ளையார் கோவிலடியில் நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை அடையாள உண்ணாவிரதமும் பி. ப 7.00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும் இடம் பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த அரசண்ணா, கடாபி மாஸ்ரர், தணிகைச் செல்வி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## 475 ஆயுதப்படையினர் பலி

## மூன்று மாத உயிர்ச்சேதம்

### பல கோடி ரூபா தளபாடங்கள் இழப்பு

கடந்த மூன்று மாத காலத்திற்குள் சிறிலங்கா ஆயுதப் படையைச் சேர்ந்த 475 பேர் பலியாகியுள்ளனர். 23- 12- 91 ஆம் திகதிக்கும் 25-3-92 ஆம் திகதிக்கும்இடையிலேயே இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான ஆயுதப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் விமானப்படை, கடற்படை, இராணுவம்,மற்றும் பொலிஸ் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இதே காலப்பகுதியில் சிறிலங்கா ஆயுதப் படையினர் பெருமளவு இராணுவத் தளபாடங்களையும் இழந்துள்ளனர். இதில் பல கோடி ரூபா பெறுமதியான தள பாடங்கள் அழிவுற்றன. இதில் பெரும் பங்கு விமானப்படையினருக்கு சீனன் குடா விமானப்படைத தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் ஏற்பட்டது

புலிகளின் அதிரடித்தாக்குதலினால், கடற்படைப் படகுகள், இராணுவ கவசவாகனங்கள், உட்பட பல வாகனங்கள் சேதமாக்கப்பட்டன இதனால் பல கோடி ரூபா நட்டம் இராணுவத் தரப்பினருக்கு ஏற்பட்டது.

இதே வேளை பல கோடி பெறுமதியான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர். இதில் பீரங்கி, 50 கலிபர் துப்பாக்கிகள், ஆர்.பி ஜி கள் உட்பட பலரக தானியங்கித் துப்பாக்கிகளும் அடங்குகின்றன. கைப்பற்றப்பட்ட ஆயுதத்தளபாடங்களின் முக்கியமானவற்றின் விபரம் வருமாறு.

★ 106 எம். எம். ஆர். சி. எல். பீரங்கி - 01
★ 50 கலிபர் துப்பாக்கிகள் - 02
★ ஆர் பி ஜீ. - 07
★ ஜி. பி எம் ஜி. - 02
★ மினிமி. எல எம். ஜி - 02
★ பி. கே. எல். எம் ஜி - 01
★ ரி 81 எல். எம். ஜி - 01
★ ஏ. கே. எல். எம். ஜி - 25
★ 203 பிஸ்ரல் - 03
★ ஜி3 ஏ3 - 09
★ எவ். என். சி. - 01
★ ஏ.கே. ரகத் துப்பாக்கிகள் -25
★ 303 ரகத் துப்பாக்கி - 03
★ சிக்னல் பிஸ்ரல் - 01
★ ரவைகள் - 71278
★ தொலைத் தொடர்பு சாதனம் - 09

## இராணுவ சுற்றி வளைப்பு கிழக்கில் 13 தமிழர் கைது

மட்டக்களப்பு மாவட்டம் வவுனித்தீவு இராணுவ முகாமிலிருந்து திங்களன்று காலை புறப்பட்டு சுற்றிவளைப்பில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினர் 13 தமிழர்களை கைது செய்தனர் பாவற்குடிச் சேனை, ஈச்சைமடு சந்தியடி, கொற்றியாவளை, மண்டபத்தடி, கருநாட்டந்தீவு ஆகிய கிராமங்களை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் ஒரு பாடசாலை அதிபர் உட்பட 13 பேரை கைது செய்து கண்களைக் கட்டியபின் சித்திரவதை செய்துள்ளனர்.

பின்னர் தாண்டியடியைச் சேர்ந்த நல்லதம்பி சின்னவன் [8 ஆம் பக்கம் பார்க்க]

## இனப்பிரச்சினைத் தீர்விற்கு 3 விடயம் தெரிவுக்குழு இனம் கண்டுள்ளதாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினை குறித்து தீர்வு காண இணக்கம் காண வேண்டிய மூன்றுவிடயங்களை பாராளுமன்றத் தெரிவுக்குழு இனங்கண்டுள்ளது என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அடுத்த கூட்டம் அடுத்த மாதம் 21 ஆம் திகதி நடைபெறுமென்றும்.

அதிகாரப் பகிர்வின்எல்லை, பகிரப்படவேண்டிய அதிகாரங்கள், வடக்குக்கிழக்கிலுள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்பு ஆகியவையே இனங்கண்டுள்ள மூன்று அம்சங்களாகும் என்று தெரிவிக் கப்படுகிறது.

## செங்கலடியில் ராணுவ துப்பாக்கிசூட்டிற்கு 2மாணவர்பலி; ஐவர்காயம்

(மட்டக்களப்பு)

செங்கலடியில் நேற்று முன் தினம் புலிகளின் தாக்குதலின் போது தப்பியோடிய சிறிலங்கா இராணுவத்தினர் பாடசாலை ஒன்றினுள்புகுந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இரண்டு மாணவர்கள் [8 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சோதிடம்

ஜாதகம் எழுத, திருமணப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, எதிர்காலப்பலனறிய, வேலணை சோதிடர் V. A. சிவராசா 152 B அரசடி றோட், கந்தர்மடம்.

(2339)


# இலங்கை மாணவர்களுக்கு ஆபத்து எதுவும் இல்லை

**-வெளிநாட்டமைச்சு அறிக்கை**

(கொழும்பு)

முன்னைய சோவியத் குடியரசுகளில் உள்ள புலமைப் பரிசில் பெற்ற இலங்கை மாணவர்கள் எந்த ஒரு பயமுறுத்தலுக்கும் உள்ளாகவில்லை என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது உள்நாட்டு யுத்தம் மூண்ட ஜோர்ஜியா குடியரசில் இப்பொழுது எல்லா உயர்கல்வி நிறுவனங்களும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது ஜோர்ஜியாவில் இருந்து தற்காலிகமாக வெளியேறிய இலங்கை மாணவர்கள் மாஸ்கோவில் இலங்கை அரசாங்கத்தின் செலவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இங்குள்ள ஏழு குடியரசுகளில் உள்ள உயர்கல்வி நிலையங்களில் சுமார் 660 இலங்கை மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இதில் அரைப்பகுதிக்கு மேற்பட்டவர்கள் ரஷ்யக் குடியரசில் வசிக்கின்றனர். ஏனையோர் உக்ரேன் (204) பெலோரஷ்யா (37) உஸ்பெக்கஸ்தான் (27) ஜோர்ஜியா (21) ஆகிய குடியரசுகளில் உள்ளனர்

சோவியத் யூனியனே இந்தப் புலமைப் பரிசிலகளை வழங்கிய போதிலும் அங்கு மாணவர்கள் குடியிருக்கும் குடியரசுகளில் பெரும்பாலானவை தொடர்ந்தும் அவர்களுக்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்க இணங்கியுள்ளன' எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


THE EXPRESS INSTITUTE KOPAY

A BOON TO STUDENTS

O/L Dec. 92

**துரித மீட்டல் வகுப்பு**

(பகல்/மாலைநேரம்)

❋ 1991 Dec-ல் பரீட்சைக்குத் தோற்றிய, 1992 Dec-ல் 2-ம் முறை தோற்றவிரும்பும் மாணவர்களுக்கான வகுப்பு.

ஏப்ரல் 10-ம் திகதிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்து இடத்திற்கு முந்துங்கள்.

[சி-4106]


# இரத்தினபுரியில் கடும் வரட்சி

(இரத்தினபுரி)

இரத்தினபுரி காவத்தைப் பகுதியில் தொடரும் வரட்சியால் தேயிலை உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் வழங்கப் பட்டு வந்த வேலை கடந்த 15 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளது இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## மில்க்வைற் சலவைத்தூள் பாவித்து




நேரத்தைச் சேமியுங்கள்!
பணத்தைச் சேமியுங்கள்!!
துணிகளின் அழுக்கைப் போக்கித்தூய வெளுப்பினைத் தருகிறது

**மில்க்வைற் சலவைத்தூள்!**

50 கிறாம் பக்கற் ரூ. 5/-
300 கிறாம் போத்தல் ரூ. 35/-
450 கிறாம் பக்கற் ரூ 45/-

வெற்று ''மில்க்வைற்'' சலவைத்தூள் பக்கற்றுகளைச் சேகரித்துப் பெறுமதியான அன்பளிப்புகளைப் பெறுங்கள்.

**- மில்க்வைற்** யாழ்ப்பாணம்.

( சி 4100 )


## கரங்கள்

கின்றது. திரட்டியோ அல்லது தனியாகவே உதவி வழங்குபவர்கள் கரங்கள் அடையாள அட்டையுடன் வரும் தொண்டர்களுக்குத்தான் அதனைக் கையளிக்க வேண்டும் என்று உத்தரவாதம் செய்துள்ளது.

பெரும் சுமைகளால் கரங்கள் அழுத்தப்பட்டிருக்கும் இப்போர்க்கால வேளையில் இதுநாள்வரை கரங்கள் அதன் மனிதநல சேவையைச் செய்து வருவது பெரும் சாதனையாகும்.

## இராணுவ

1983 ஆம் ஆண்டிலிருந்து சுமார் பத்து ஆண்டுகள் வரையில் தமிழர் தேசிய இனப் போராட்டத்தை இராணுவரீதியாகவெற்றிகொள்ள எடுத்த முயற்சிகளில் தோல்வி கண்ட சிறிலங்காஅரசாங்கம்1990இல் இராணுவ நடவடிக்கையுடன் பொருளாதாரத் தடையை இணைத்துக் கொண்டது. தற்பொழுது சிங்களக்குடியேற்றங்களை நிறுவுவதிலும்பெரும் கவனம் செலுத்துகின்றது. இக் குடியேற்றங்களின் மூலம் தமிழர் தாயக மண்ணை துண்டாடி தமிழர் போராட்டத்தை சிதைக்க முற்படுவதோடு சிங்கள மக்களையும் தமிழரையும் நேரடியாக மோதவிடுவதற்கும், பகையுணர்வை வளர்த்து தமிழரை அழித்தொழிக்கவும் திட்டமிடுகின்றது இதற்கு அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சிங்கள புத்திஜீவிகள் அரச உயர் அதிகாரிகள் பௌத்தபிக்குகள் பேரினவாதப் பத்திரிகைகள் மற்றும் சகல பௌத்தசிங்கள பேரினவாத சக்திகள் யாவும் தீவிர கவனம் செலுத்துகின்றன.


ஆண்கள், பெண்களுக்கான ஆடைகளை ஒரே இடத்தில் தைத்துக் கொள்ள

**அழகியல் தையல் நிலையம்**

73, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

(சி/4083)



## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4. 00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4. 00 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது

**OPERATION CROSS BOW**

(குறெஸ்போ நடவடிக்கை) (சி/4079)


# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 2.30ற்கு யாழ். திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திரு ஆர். எஸ். நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டுப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக திரு சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**திருமதி கணபதி சின்னப்பிள்ளை**

(மந்துவில்)

எம்மை நாமாக வாழ வழிய மைத்த எம் பாசஅன்னையாம் அன்புத் தெய்வத்தை நினைவு கூர்ந்து அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்ட யாவருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்த அன்புள்ளவர்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவி நல்கிய நல்லோருக்கும் நன்றி நவில்கின்றோம்.

அத்துடன் இன்று (27-03-1992) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் நாளை (28-03-1992)சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. நடராசா (தலைவர் பனை அபிவிருத்திச் சபை)
திருமதி அ இராசேந்திரம் (ஸ்கந்தபுரம்)
க. செல்லத்துரை (ஸ்கந்தபுரம்) க. தங்கராசா
(விலைக்கட்டுப்பாட்டு பிரிவு - யாழ். கச்சேரி)
க. இராசதுரை (நடேஸ்வராக் கல்லூரி அதிபர்)
க. இராசேந்திரம் (ஆசிரியர் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்)
க. சிவராசா (ஆசிரியர் யா/ சென். ஜேம்ஸ் மகா. வி)
66/3 திருவையாறு,
கிளிநொச்சி.

(2341)

# நினைவு கூருகின்றோம்...

## 1992-03-27

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ **பாக்கியன்** (சோமநாதன் பாக்கியராசா -காரைதீவு, கல்முனை, அம்பாறை)

1986 ஆம் ஆண்டு பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**கார்த்திக்** (கந்தையா ஜெயந்தன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)

1988 ஆம் ஆண்டு பாலகிகாட்டில் இந்தியப்படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் தீபன்** (கந்தையா தவராசா - சந்திவெளி மட்டக்களப்பு)

**லெப் ரமணி** ( )

கிளிநொச்சியில் இத்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். ஆனந்தன்** (நவரத்தினம் அன்பழகன்-புவனேஸ்வரி அம்பாள் வீதி, அரியாலை)

இளவாலையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**தனந்திரன் / மேரிதாஸ்** (சவரிப்பிள்ளை அன்ரன் கிறிஸ்ரினோல்ட் - மாரீசன் கூடல், இளவாலை)

1989 ஆம் ஆண்டு மடு வீதியில் பேருந்தில்பயணம் செய்கையில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

மன்னார் பிராந்திய பொதுக்குழு உறுப்பினர்

★ **சில்வா** (அன்ரன் சதாசகாயம் சில்வா - பெரிய நாவற்குளம், மன்னார்)

★ **அஜித்** (சௌந்தரராஜா செல்வராஜா- வட்டிப்பித்தான்மடு, மன்னார்)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது காயமுற்று பின்னர் வீரச்சாவெய்திய

**சுபன்** (இராமநாதன்செல்வேஸ்வரன்- கெற்பெலி மிருசுவில்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி-4104)




அவன் ஒரு வித்தியாசமானவன். தனது வாழ்நாளில் மட்டுமல்ல, மரணத்தின் பின்னும் தான் வித்தியாசமானவன் என்பதனை உணர்த்தி விட்டான். அவனது வாழ்நாள் அதிலும் போராட்ட வாழ்நாள் மிகவும் குறுகியதாக இருந்தாலும் வரலாற்று ஏடுகளில் அவனுக்கென்றொரு அத்தியாயம எழுதப்பட்டு விட்டது.

எந்நேரமும் கள்ளமற்ற சிரித்த முகம் என்றும் துன்ப துயரங்களுக்கு ஆட்படாத மன உறுதி. ஒவ்வொரு கண நேரமும் சுறுசுறுப்பான செயற்பாடு. அவன் தான் ராதா. அவன் கால்கள் தவழ்ந்து திரிந்த பூமி இன்று எனது கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருக்கின்றது. ஸ்ரீலங்கா அரசின் கோரப்பிடியில் சிக்குண்டு தவிக்கும் திருகோணமலையின் எல்லைக் கிராமங்களில் ஒன்றுதான் திரியாய் எனும் அழகிய சிறு ஊர். அதுதான் ராதா பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து வளர்ந்த மண். மிகவும் வறுமையான குடும்பத்தில் பெற்றோரையும் ஒரேயொரு பெண் சகோதரியையும் பொறுப்பேற்க வேண்டிய நிலையில் ராதா இருந்தான். ஆம், அவன் வீட்டுக்கு ஒரேயொரு ஆண்மகன் ஆனால அந்நாட்களில் குடும்பப் பொறுப்பை ஏற்கக் கூடிய வயதை அடையாத அவன் அவ்வூர் பள்ளியில் கல்வி கற்று வந்தான்.

ஆனால் ராதாவின் வயதிற்கும், அவனது மன வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை. அந்தச் சிறிய கிராமத்தில் எந்த ஒரு பொது வேலையானாலும், எந்த ஒரு பொதுநிகழ்வானாலும் அங்கே ராதாவைக் காணலாம்... அவை ஒவ்வொன்றிலும் ராதாவின் முக்கிய பங்களிப்பு இருக்கும். கல்வி கற்கும் காலங்களிலேயே, அவனது சிந்தனைகள் பொது வேலைகளில் நாட்டம் கொள்ளத் தொடங்கி விட்டன. அவன் வீட்டில் இருக்கும் நேரம் மிகவும் குறைவு. அவனது பெற்றோரைப் பொறுத்தவரை அது அவனது



லெப். ராதா

குற்றமாகவும் இருந்திருக்கலாம். ஆனால் எந்நேரமும் சுறுசுறுப்பாக இருக்கும் அவனுக்கு இந்தச் செயற்பாடுகள் தேவையாக இருந்தன.

மெல்ல மெல்ல அவனது விடுதலைப் போராட்ட உணர்வு துளிர்விட்டு வளர ஆரம்பித்தது. ஈழமண்ணில் இந்திய இராணுவத்தினர் அராஜகம் புரிந்து வந்த காலப்பகுதி அது. இந்திய இராணுவத்தினர் மீது முற்றுமுழுதான வெறுப்பும் எதிர்ப்புணர்வும் கொண்டிருந்த இவனும் இவனது பாடசாலை நண்பர்களும் தமது எதிர்ப்புணர்வைக் காட்டிக் கொண்டவிதம் சற்று வித்தியாசமானது. இவர்கள் கல்வி கற்று வந்த பாடசாலையில் நடந்த ஓர் பொது நிகழ்ச்சியில் பாவிப்பதற்கென ஓர் புதிய, பெரிய நைலோன் நிலவிரிப்பு அங்கிருந்த இந்திய இராணுவத்தினரால் வழங்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சி முடிவுற்றதும் இவனும் இவனதும் நண்பர்களும் சேர்ந்து அந்த நில விரிப்பைப் பலவேறு இடங்களில் கிழித்துச் சேதப்படுத்திய பின்னர் கொண்டு சென்று கொடுத்த பொழுது இந்திய இராணுவத்தினரால் எச்சரித்து அனுபபப்பட்டனர் அந்தச் சிறு வயதில் அவனுக்கு இருந்த இந்த உணர்வுகள் தான் பின்னர் அவனது போராட்ட வாழ்க்கைக்கு வித்திட்டது எனலாம்.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறிய காலப்பகுதியில் இவன் விடுதலைப் போராட்டத்தின் மீது முழுமையாக ஈர்க்கப்பட்டிருந்தான். அக்கிராமத்தில் இயங்கிய விடுதலைப் புலிகளின் நெருங்கிய ஆதரவாளனாகவும் உதவியாளனாகவும் செயற்படத் தொடங்கினான். அவ்வூர்ப் பாடசாலையில் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினை ஏற்படுத்துவதற்குத் தானே முன்னின்று செயற்பட்டான்.

ஆனால் சிறிது காலத்தில் அவன் தன்னை முழுமையாகவே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு முடிவு செய்து விட்டான். தனது தாயாரைக் காப்பாற்ற வேண்டிய தனது பொறுப்பைப் பற்றி அவன் சிந்திக்கவிலலை. ஏனெனில், தனது தாயாரைப் போன்று எத்தனையோ தாய்மார்கள்இருப்பதை அவன் நன்குணர்வான். தாய்த் திருநாட்டின் விடுதலையைத் தவிர வேறெதுவும் அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. அவன் தனது முடிவைச் செயற்படுத்தும் நோக்குடன் அப்பகுதிப் போராளிகளிடம் தனது முடிவைத் தெரிவித்தான். ஆனால் அவனது குடும்ப நிலையை நன்கு உணர்ந்த அவர்கள் ராதாவை இயக்கத்தில் இணைய அனுமதிக்கவில்லை. அவன் எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை. ஆனாலும் ராதா உறுதியாக இருந்தான். அவன் முடிவுகளை மாற்றிப் பழக்கம் இல்லாதவன். தனது ஊரில் இருக்கும் வரை இயக்கத்தில் இணைய முடியாது என்பதனைத் தெளிவாக உணர்ந்தான். விளைவு, தனது நண்பன் ஒருவனுடன் ஊரை விட்டு வெளியேறினான் முல்லைத்தீவு வந்து சேர்ந்த ராதாவும் அவனது நண்பனும் அங்கு தம்மை இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர், ஆம் ராதா மிகுந்த சிரமப்பட்ட பின்னரே தனது போராட்ட வாழ்க்கையை ஆரமபிக்கின்றான்.

முல்லைத்தீவில் தனது பயிற்சியை முடித்துக் கொண்ட ராதா முல்லை மாவட்டத் தளபதி காந்தனின் குழுவுடன் சேர்க்கப்பட்டான். பயிற்சியின் போது இவனது திறமையை அவதானித்த மேஜர் காந்தன் தனது முகாமில் நடத்தப்பட்ட பயிற்சிப் பிரிவிற்கு ராதாவைப் பயிற்சிபாளனாக நியமித்தான். அந்தப் பிரிவிற்குப் பயிற்சி கொடுத்து முடித்த ராதா பின்னர் முல்லைத்தீவு இராணுவ முகாம் பகுதியில் இடம்பெற்ற பாரிய தாக்குதலில் பங்கு பற்றிக் கையில் காயமடைந்து யாழ் வந்தடைந்தான். கையில் ஏற்பட்ட காயத்தினால் அவனது கை ஒரு பக்கம் வளைந்து விட்டது. சில மாதங்கள் யாழ்ப்பாணத்தில் நின்று தனது காயத்தை மாற்றிய ராதா பின்னர் வவுனியாப் பகுதிக்கு மாற்றப்பட்டான்.

மன்னார் - வவுனியா எல்லைப் பகுதிகளிலேயே இவன் இறுதி வரை செயற்பட்டான். இப்பகுதிகளில் இவன் குறுகிய காலமே செயற்பட்ட போதிலும் அப்பகுதி மக்கள் மத்தியிலும், போராளிகள் மத்தியிலும் மிகவும் பிரபல்யம் அடைந்தான் போராளிகள் அனைவராலும் மிகவும் அன்பாக நேசிக்கப்பட்டான். இவற்றுக்கெல்லாம் காரணம் அவ

(4ஆம் பக்கம் பார்க்க)

**லெப். ராதா வீரச்சாவெய்திய முப்பத்தியோராவது நாள் இன்றாகும்.**

# போர்க் காலச் சேவையில் “கரங்கள்”



சிறிலங்கா அரசு எமது மண்ணில் யுத்தகள போர்க்கால நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இந்த நெருக்கடியை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. போர்ச் சூழலைச் சமாளிக்க அங்குமிங்குமாகச் சேவை உணர்வோடு தனித் தனியாகப் பல சமூக மையங்கள் இயங்கி வருகின்றன. முழுமையான போர்க்கால சேவை முயற்சி முழுச் சமூகமும் ஒத்திசைவாக இயங்கும் ஒரு மாற்று ஏற்பாடில்லாமல் செழுமையாக நிறைவேறாது. எனவே தமிழ் மக்கள் அனைவரும் ஏதோ ஒரு புள்ளியில் ஒருங்கிணைந்து பரிவுணர்வும் மனிதத்தன்மையும் உள்ள ஒரு அமைப்பைப் பெறவேண்டும் என்ற தேடலின் விளைவு கரங்கள். இதன் இயங்குதளம் சமூகம். ஆனையிறவுப் போராட்ட காலத்தில் ஜீவத் துடிப்புடனும், மனித மாண்புடனும் தொழிற்பட்ட பாலம் அமைப்பு இப்போது கரங்களின் துணையமைப்பாக நெருக்கடி காலங்களில் இயங்கும்.

''நாடு உனக்கு எனக்கு என்ன செய்தது என்று கேட்பதை விட, நீ நாட்டுக்கு என்ன செய்தாய்?'' என்ற வாசகத்தைக் கரங்கள் பரிந்துரைத்துள்ளது. இந்த வாசகத்தை நோக்கும் போது, இப்போராட்ட காலத்தில் கூடுதலான பங்களிப்பைக் கரங்கள் சமூகத்திடமிருந்து எதிர்பார்க்கிறது என்பது தெளிவாகிறது. போர்க்கால மனித நேய சேவை என்பது மனிதத் தன்மை மாத்திரமல்ல. இதில் நாட்டுப் பற்றும் இழையோடி நிற்கின்றது.

போர்க்காலச் சேவை என்ற உன்னத இலட்சியத்தில் பணியாற்றும் கரங்கள் ஒரு தெளிவான திட்டத்துடன் செயல்படுகின்றது. கரங்களின் சமுதாயக் குறிக்கோள் பின்வருவனவற்றைத் தன்னகத்தே கொண்டது.

(அ) நெருக்கடி மற்றும் போர்க்காலங்களில் காயப்பட்டவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவும் வகையில் பின்தள வேலைகளைச் செய்தல்.

(ஆ) நெருக்கடி நிலைகளில் தமிழ் மக்களிடையே உள்ள நானாவித வளங்களையும் பயன்படுத்தி ஆக்கபூர்வமான சேவையாற்றுதல்.

**கரங்களின் இயங்குதளம் சமூகம். அது மக்களுடன் ஒட்டி உறவாடும் ஒரு போர்க் காலச் சேவை அமைப்பு.**

இன்று நாம் வாழும் அரசியல் - பொருளாதார போர்க் காலச் சூழலைப் பிரதிபலிப்பதாகக் கரங்களின் இலச்சினை அமைந்துள்ளது. வீரியம் மிக்க மூன்று கரங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. முதலில் பெண்ணின் கர முஷ்டி அடுத்தது போராளியின் கர முஷ்டி அதில் இரத்தம் வடிகிறது மற்றது ஆணின் கர முஷ்டி இலச்சினை மனித உணர்ச்சிகளை



சோழன்

அடக்கியுள்ளது. மேலெழுந்தவாரியாக இல்லாமல் ஆழமான கருத்துகளை வெளிப்படுத்துகின்றது. பெண்களும், போராளிகளும், ஆண்களும்– அனைத்து மக்களும் இன்றைய பகைப்புலத்தில் ஒன்றிணைந்து, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனித நேயப்பணிகளுக்கு உதவவேண்டும் என்பதுஇலச்சினையின்கவனக் குவிப்பாகும். கரங்கள் நம்பிக்கையின் குறியீடாகவும் காட்டப்படுகிறது. கரங்கள், கரங்களை உருவாக்குகின்றன.

## கரங்கள் பணி

இன்றைய வரலாற்று நிர்ப்பந்த காலகட்டத்தில் ஒரு காரியம் செய்ய வேண்டும் என்பது தவிர்க்கமுடியாததாகி விடும் போது, மனிதன் தன் மனித நேயத்தை எப்படிச் செயற்படுத்த முடியும் என்பதற்குக் கரங்கள்உதாரணமாகஅமைகிறது.

**மனிதன் தன் மனித நேயத்தை எப்படிச் செயற்படுத்த முடியும் என்பதற்குக் கரங்கள் உதாரணம்.**

கரங்கள் பணியில்மூன்றிடங்களில் பணிமனைகள் அமைந்துள்ளன.அனைத்துப்பகுதியில் உள்ள மக்களும் கரங்களின் சேவையில் உறவாடவேண்டும் என்ற நோக்குடனும். மக்கள் எல்லோரும் நன்மையைப்பெற வேண்டும் என்ற எண்ணத்துடனும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வடமராட்சி தென்மராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் கரங்கள் பணிமனைகள் அமைந்துள்ளன. வலிகாமத்தில் கோப்பாய், மானிப்பாய்,சுன்னாகம் ஆகிய இடங்களிலும் அமைந்துள்ள மையங்கள் கிராமங்களிலும் போர்க்கால சேவையைப் பரிமாறிக் கொள்கின்றன. கரங்களின் தலைமைப் பணிமனை யாழ்ப்பாண நகரத்தில் இயங்குகின்றது.

கரங்கள் பிரிவுகள் தோறும் பல்வேறு குழுக்களைத் தோற்றுவித்து,ஒவ்வொருகுழுவிலும் அந்தந்தததுறையில் அனுபவஸ்தர் இடம் பெறுகின்றனர். வயது மற்றும் பால் என்றுஅறங்கோணாத வகையில்கரங்கள் அனைவரையும் அதன் சேவைக்கு அழைக்கிறது. ஒவ்வொருவரின் ஆற்றல்,திறமை ஆகியன உணரப்பட்டு அவரவருக்குப் பொருத்தமான பணியில் பயன்பொருத்தமாகவும், சீராகவும் செயற்பட வழி செய்யப்படுகின்றது. குழுக்களுக்கிடையில் ஒரு ஊடகமாக அல்லது இணைப்பாளராக ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவர் இருப்பார்.

கரங்கள் சமூகத்திலிருந்து விலகிய ஒரு பிரத்தியேகமான அமைப்பன்று.அது மக்களுடன் ஒட்டி உறவாடும் ஒரு போர்க்காலச் சேவை அமைப்பு. கரங்களின் ஆதாரபுருதியாக இருப்பவை அரச சார்பற்ற மனித நேய ஸ்தாபனங்கள், தொழிற் சங்கங்கள், அரச ஸ்தாபனங்

— மதன் —

(6ஆம் பக்கம் பார்க்க)

# அவன் மனிதன்

"மணலாறில் திரும்பவும் சண்டை துடங்கீட்டுது ...ம் எத்தினை பெடியள் அநியாயமாச் செத்துக் கொண்டிருக்குதுகள். அப்பவும் யோசிக்காமல் முண்டிப் போட்டு தோத்தது காணாதெண்டு, இப்பவும் கனக்கப் பெடியளை பலி குடுத்துக் கொண்டிருக்கிறார்கள்... இருந்த நிம்மதியும் போச்சுது"

மணலாறில் தொடர்ந்து புலிகளின் வீரசாதனை. 41 படையினர் பலி! நவீனரக ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டன எனக் கொட்டை எழுத்தில், பத்திரிகையின் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்திருந்த வாக்கியங்களை மகிழ்ச்சிக் கிளை பரப்பவாசித்துக்கொண்டிருந்த சேகர் தந்தையின் வார்த்தைகளைக் கேட்டு நிமிர்ந்தான்.

"அப்பிடிச் சொல்லாதேங்கோ அவங்களின்ரை உயிர்எங்கடை மண்ணுக்காகத் தான் போய்க்கொண்டிருக்கு. அதில தான் ஈழமும் மலரப் போகுது அப்பத் தான் நிரந்தரமான நிம்மதி வரும்"

மூக்குக் கண்ணாடியைக் கழட்டிக் கரத்தில் பொதித்துக் கொண்ட ரெத்தினம் மகனைப் பார்த்தார் அதில் மறைந்திருந்த சினம் அவனுக்குள் வெளிச்சம் போட்டது.

"உங்கடை சுயநலத்தால என்னைக் கட்டிப் போட நினைக்காதேங்கோ. வாய்க்கு வாய் எங்கடை பெடியள், எங்கடை பெடியள் எண்டு கதைச்சுக் கொண்டு தங்கடை எல்லாப் பிள்ளையளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கிற வையில நீங்களும் ஒருத்தரா சேர்ந்திடாதேங்கோ"

"எல்லாப் பிள்ளைகளையும்" என்பதில் ஒரு அழுத்தம் தொனிப்பதை ரெத்தினம் புரிந்து கொண்டார்.

"சேகர் கனக்கக் கதையாதை ... படிச்சு முன்னேறுகிற வழியைப் பார். ஓம் சொல்லிப் போட்டன்"

மகனை அதட்டிக் கொண்டு வந்த பாக்கியம் கணவனிடம் தேநீர்க் கோப்பையை நீட்டினாள்.

"பிள்ளையோட சரிக்குச் சரி கதைக்கிறதால தான் இவனும் இப்பிடிக் கதைக்கின்றான் இயக்கத்தைப் பற்றிக் கதைக்கக் கதைக்க இவரின்ரை மனமெல்லே குழம்பிப் போடும்"

என்ன தாயிவள்? களத்துக்குத் தனது பிள்ளைகளை அனுப்பி விட்டு மற்றைய போராளிகளைத் தமது பிள்ளைகளாக நினைத்து களிக்கும் தாய்மைகள் நிறைந்து வழியும் இம் மண்ணில் இப்படியும் ஒரு தாய்.

சேகரின் மனம் பெருமூச்சொன்றை உதிர்த்தது. "அது தான்அப்பவே சொன்னனான். குடும்பமாக் கொழும்புக்குப் போயிட்டடா எந்தக் கரைச்சலுமில்லை. இப்ப இவனால தான் பெரிய பிரச்சினையாயிருக்கு"

தேநீரை இரசித்து உறிஞ்சிக் கொண்டிருந்தவரின் கண்களிற்குள் வண்ணத்திரையாக கொழும்பு நகர் புலப்பட்டு மனத்தை மயக்கத் தான் செய்தது ஆனாலும் வீடும், காணி பூமிகளும் நினைவைக் கிழித்துக் கோபத்தைக் கிளறிவிட்டது.

"அதுக்கு இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறாய். போறதெண்டால் சும்மாவே பாஸெடுக்கத் திரியிறதிலேயே மனிசருக்கு விசர் பிடிச்சிடும் இந்த வீட்டை குடுத்தாத் தான் பாஸும் குடுப்பான். மற்றக் காணியளை ஆரிட்டைக் குடுக்கிறது உன்ரை ஆக்களிட்டையே..."

ரெத்தினத்தின் சூடான பேச்சு பாக்கியத்தின் குரலைச் சிறிது தணிய வைத்தது.

"அப்ப இவனையாவது வெளியால எங்கையாவது அனுப்பிற வழியைப் பாருங்கோவன். எவ்வளவு காசெண்டாலும் குடுத்துப் பாஸை எடுப்பமப்பா"

அவர்களின் உரையாடல் அவனுக்கு எரிச்சலை விட வேதனையைத் தான் அதிகம் தந்தன.

"இஞ்சையம்மா விசர்க்கதை கதைக்காதேங்கோ. வெளிநாட்டுக்கோ அங்கை நான் போறதோ. வேணுமெண்டால் நீங்கதான் ரெண்டு பேரும் போங்கோ" என்று கூறியவனை முறைத்தாள் தாய்.

"போகாமல் என்னசெய்யப் போகிறாய். இங்கைபடிப்பும்இப்பிடியும்அப்பிடியுமாக்கிடக்கு அண்ணைமார். ரெண்டு பேரும் உன்னை நினைச்சுத்தான் கவலைப்படுகிறாங்கள். உன்னையும் அவங்களிட்டை அனுப்பிப் போட்டால் நாங்கள் மூண்டு பேரும் நிம்மதியா இருந்திடுவம்"

"என்ரை மூத்தவன் ஆனையிறவு அடிபாட்டில் வீரமரணமடைஞ்சிட்டான்... இளையவன் முல்லைத்தீவில்... இப்ப கடைசி மகனும் களத்தில் நிக்கிறான் தம்பி"

ஆனையிறவில், கண் துஞ்சாது சமர் புரிந்து கொண்டிருந்த போராளிகளுக்காக உணவுப் பொருட்களை இல்லந் தோறும் சேர்க்கச் சென்றிருந்த போது ஓர் தாய் கண்ணீருடன், ஆனால் பெருமையோடு அன்று கூறியது நினைவில் மலர்ந்தது

மண்ணுக்காக இருவரை விதையாக்கி விட்டு உவகையோடு நிற்கும் அந்த வீரத் தாயையும், சுயநலமேயுருவான தனது தாயையும் ஒப்பிட்டு நோக்கவே அவனது உள்ளம் கூசியது.

"அண்ணா ராஜனண்ணை வந்திருக்கிறார்... ரியூசனுக்கு நேரம் போட்டுதாம்" என்ற தங்கையின் குரல் கேட்டுச் சிந்தனையை கிழித்தவனது கரம் பாடப்புத்தகங்களைத் தூக்க, கால்கள் வெளியே விரைந்தன.

"ஏலுமெண்டால் வென்று பார் இல்லாட்டி திரும்பிப் போ" வீதியை அடைக்கும் படியாக நின்றுகொண்டு தங்கள் கும்மாளங்களை வெளிப்படுத்திக் கொண்டு நின்ற கல்லூரி மாணவர்களை சேகரின் கண் ஆழ்ந்து ஊடுருவியது.

மண்ணின் பரப்பை அதிகரிக்க வைப்பதற்காக குருதியை வழிய விட்டுக்கொண்டிருக்கும் போராளிகளின் நினைவுகள் கிஞ்சித்தும் இல்லாதவர்களாக தங்கள் கூத்துக்களை பறைசாற்றிக்கொண்டிருப்பவர்களின் பரிதாபநிலையைக்கண்ட சேகரது கண்கள் சினத்தை உமிழ்ந்தது.

காயப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு விரைந்து வந்த வாகனம் கூட தனது வேகத்தைக் குறைக்க வேண்டியதாயிற்று.

விளையாட்டுத்துறையின் எல்லையைவிட்டுவெளியேறிய அம் மனிதாபிமானமற்றவர்களைக் காணப்பிடிக்காதவனுடைய கால்கள் சைக்கிள் பெடலை வேகமாக மிதித்தவாறே ரியூட்டறியை நோக்கி ஓடவாரம்பித்தன.

"இண்டைக்கு மாஸ்ரர் வகுப்புஎடுக்கிறாரோதெரியாது — அந்த மனிசன் இயக்கத்தோடையே உயிரை விட்டுக் கொண்டு திரியிறார்" என்று கூறும் நண்பனுக்கு என்ன கூறி இன்றைய நிலையை விளங்க வைப்பது என்று தெரியாதவனாக வகுப்பறை வாங்கில் அமர்ந்து கொண்டான்.

அங்கு களத்தில் போராளிகள். இங்கு வகுப்பறையில் கும்மாளங்கள். இது என்ன காலமடா? மாணவர்களின் சீண்டல் ஒலிகள் அவனது காதினுள் தேளாகக் கொட்டியது.

'மாணவ சமுதாயமே, போர்க்கால மேகங்கள் கருக்கொண்டிருக்கும் இன்றைய பொழுதினில் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படு' என்ற கோசத்தை எழுப்ப வேண்டும் போல அவனது மனம் துடித்தது.

அதே வேளையில் 'சேர் வாறார் சேர் வாறார்...' என்ற கிசு கிசுப்பான குரல்கள் வகுப்பறையை நிசப்தப்படுத்தியது. நுழைந்த ஆசிரியர் அமைதியாக இருந்த மாணவர்களது முகங்களைப் பார்த்தார்.

'இப்ப மணலாறில பிரச்சினை நடந்து கொண்டிருக்கிற விசயம் தெரியும்...' என்று ஆசிரியர் தொடங்கியதைக் கேட்டு மாணவர்களின் கைகள் விரித்த கொப்பிகளை மூடின.

'அதனால் காயப்பட்ட போராளிகளைப் பராமரிக்கிறதுக்கு ஆக்கள் காணாது ரியூட்டறிகளில் இருந்து கொஞ்ச கொஞ்ச மாணவர்களைக் கேட்டிருக்கினம். பராமரிக்கப் போக விரும்பியவர்கள் தயவு செய்து போங்கள்' என்று கூறியவர் மாணவர் மத்தியில் கவிந்திருந்த மௌனத்தை கிழிக்க விரும்பியவர் போன்று தொடர்ந்தார்.

'இண்டைக்கு இழக்கிற பாடங்களை இன்னொரு நாள் ஈடு செய்யலாம் ஆனால் போராளிகளின்ரை இழப்பை யாராலுமேஈடு செய்யேலாது'

அவரது வார்த்தைகளைக் கேட்பதிலிருந்த ஆர்வம் அதில் தங்கியிருந்த பணிப்பை மேற்கொள்வதற்கு மாணவர்கள் தயங்கிக் கொண்டிருப்பதை வெறுப்போடு நோட்டமிட்ட சேகர் முதல் மனிதனாய் எழுந்தான். அவனைத் தொடர்ந்து சிலர் எழுந்ததைப் பார்த்து சிறிது மலர்ந்தான். ஏனைய மாணவர்களின் புரிந்துணர்வுகள் இன்னும் வியாபிக்கவில்லையே என்பதை வேதனையுடன் ஒருசேர நினைத்துக் கொண்டவர்களின் துவிச்சக்கர வண்டிகள் மருத்துவமனையை நோக்கி விரைந்தன.

"இஞ்சையப்பா நேரம்ஏழாகப்போகுது உவனை இன்னும் காணேலையப்பா" என்ற பாக்கியத்தின் குரலைக் கேட்டுக் கொண்டு நுழைந்தான் சேகர்.

"ஏழுமணி வரைக்கும் ரியூசனே உனக்கு. மற்றப் பிள்ளையள் ரெண்டுமணிக்கே வீட்டை போட்டுதுகள் இவ்வளவுநேரமும் எங்கை போனனீ?"

"மற்றப் பிள்ளையள் படிப்பு படிப்பெண்டு ஓடித்திரியுதுகள் இவர் சமூகசேவை செய்து போட்டு வாறார்"

ரெத்தினத்தைத்தொடர்ந்து பாக்கியம் ஏசிய ஏச்சுக்களைக் கேட்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தான். புத்தகங்களை மேசை மீது போட்டு விட்டு கட்டிலில் குப்புறவிழுந்தான்.

'தம்பி எப்ப இந்தக் காயங்கள் மாறி திரும்பவும் எப்ப சண்டைக்குப் போவமெண்டு இருக்கு...'

சேகரினால் பராமரிக்கப்பட்ட ஒரு போராளியின் இதயத்திலிருந்து எழுந்த வார்த்தைகளை நினைவில் மீட்டினான்.

'அங்கை எங்கடையள் அடிக்கிற அடியில ஆமி ஓடுற ஓட்டத்தைப் பார்க்க வேணும்...'

அவனது நிகழ்வுகள் தந்த நிதர்சனம் சொற்களாக உருவெடுத்து வருவதை எண்ணிப் பார்த்து உடல் சிலிர்த்தான்

பக்கத்துப் படுக்கைகளில் வேதனையின் முனகல்கள். ஆனாலும், களத்தினை நினைவூட்டி உரையாடும் போது அவ் வீரர்களின் முகங்களில் வெற்றியின் மலர்ச்சி இழையோடுவதை அவதானித்த அவனது மனதில் 'இவர்கள் தான் போராளிகள்' என்ற உணர்வு கிளர்ந்தது.

இவர்களின் தியாகத்தை, விடுதலையின் தேவையை என்னால்தான் என் பெற்றோருக்கு உணர வைக்க முடியும் என்ற உறுதியான முடிவை எடுத்த போது அவனது மனம் மத்தாப்பூவாகச் சிரித்தது.

அடுத்த நாள் ..

பாக்கியத்தின் அழுகையால் வீடு அமளிப்பட்டது.

மனம் அதிர்ந்து போய்க் கதிரையில் அமர்ந்திருந்த ரெத்தினத்தின் கரத்தினில் ஒரு கடிதம் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது அதில் ..

அம்மா,

ஆயுதம் தூக்குவது இன்றைய காலத்தின் கடமை இதனைச் சிந்தித்துப் புறப்பட்டு விட்டேன். என்னைத் தேட வேண்டாம்.

என்று எழுதியிருந்தது ★

-செல்வி அருணா புஷ்பராஜா

## போட்டிகள் எத்தனையடி!

ஓ......
சமுதாயமே!
நாங்கள் திருமணம்
எனும் போட்டியில்
வெற்றி பெற
எத்தனை தடைகள்
தெரியுமா?

முதலில் —
பெண் பார்க்க வரும்
ம (ா) க்களுக்குப்
பிடிக்க வேண்டும்
இது எங்களது
கால் இறுதிப் போட்டி!

அடுத்து —
ஆசைக்கு
அளவேயில்லாமல்
கேட்கும்
வரதட்சணை!
இது
அரை இறுதிப் போட்டி

திருமணப் பந்தலில்
அமர்ந்த பிறகும் — அது
நடக்குமா
என எதிர்பார்ப்பது
முழு இறுதிப் போட்டி!

தாலி கட்டிய பிறகும் கூட
வெற்றி பெற்றோமா என்று
சரியாகத் தெரியவில்லை!

இது எங்களது
வாழ்க்கைப் போட்டி

சுந்தரமுருகன்,
ராணி 23-2-92

## விழுதுக்கள்

னது சுறுசுறுப்பான செயற்பாடுகளும் திறமையும் தான். அப்பகுதிகளில் நடந்த பல தாக்குதல்களிலும் இவன் பங்கேற்றான்.

எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவென்றால் ராதாவின் பெயர் அப்பகுதி இராணுவத்தினர் மத்தியில் பரவலாக அடிபடத் தொடங்கியது ஆகும். ராதாவின் திறமையை கேள்விப்பட்ட இராணுவத்தினர் அவனை உயிரோடு பிடிப்பதற்குத் திட்டமிட்டுப் பல முயற்சிகள் செய்தனர். இதனை அறிந்த சக போராளிகள் ராதாவிடம் இதைப் பற்றிக் கூறியபோது தனது இயற்கையான சிரிப்புடன் அதனைக் கேட்டுக் கொண்டான். இவ்வாறு தனது சக போராளிகளுடன உரையாடிக் கொண்டிருந்த பொழுது ஒருநாள் ராதா கூறினான், "நான் இராணுவத்தால் சுடப்பட்டு எனது உடல் இராணுவத்தால் எடுக்கப்பட்டாலும் சரி அதற்கு முன் நான் இராணுவத்தின் ஒரு உடலையேனும் கைப்பற்றுவேன்" என்று உறுதியாகக் கூறினான்.

தனது சபதத்தை நிறைவேற்ற ராதா முழு முயற்சி எடுத்தான். அவனது எண்ணம் நிறைவேறும் நாளும் வந்தடுத்தது. 22-01-92 இல் வவுனியா சமயபுரம் பகுதியில் நடமாடிய இராணுவத்தினர் பற்றித் தனது தனியான முயற்சியின் மூலம் வேவு பார்த்து வவுனியா மாவட்டத் தாக்குதல் குழுவுடன் இணைந்து பதுங்கித் தாக்கி வெற்றி பெற்றதுடன் அத்தாக்குதலில் 06 இராணுவத்தின் உடல்களும் பல ஆயுதங்களும் கைப்பற்றப்படுவதற்குக் காரணமாக இருந்தான். இதனால் வன்னித் தளபதியினால் ராதாவிற்கு ரி 81 ரகத் துப்பாக்கி ஒன்று வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டான்.

இவ்வாறு பல வீரமிகு செயற்பாடுகளால் ராதா புகழடைந்து வந்த வேளையில் தான் அந்தத் துயரச் சம்பவம் நடந்தது. எதிரிக்கு மட்டுமல்ல காலதேவனுக்கும் அவனின் வீரமிகு செயற்பாடு பிடிக்கவில்லைப் போலும். அவனும் இவனின் உயிரைப் பறிக்கத் திட்டம் தீட்டியிருந்தான். ஆனால் அதனை அறிந்து கொள்ளும் ஆற்றல் மட்டும் எமக்கு இருந்திருந்தால் .. .. அந்தக் கொடிய நாளில் .. இராணுவத்தினர் தமது தாக்குதல் முயற்சியில் தோல்வியடைந்து பின்வாங்கிச் சென்ற வேளையில் அப்பகுதிக்குச் சென்ற ராதா இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த பின்னர் சயனைட் அருந்தி வீரச்சாவு எய்தினான். மரணித்த பின்னரும் சரித்திரம் படைத்த மாவீரர் வரிசையில் ராதாவும் ஒருவன். ஒரு போராளி தனது எதிரியினாலும் மதிக்கப்பட்டவனாக இருந்தால் அதை விட அவனுக்குப் புகழாரம் தேவையில்லை. ஆம், ராதாவின் உடலைக் கைப்பற்றிய இராணுவத்தினர் அவனின் உடலுக்கு எந்த சேதத்தையும் விளைவிக்காது அவன் அருகில் கிடந்த ஓர் அட்டையில் "போராளி" என்று எழுதிய மையோடு அவன் அணிந்திருந்த தகட்டினையும் அவனருகேயே விட்டுச் சென்றனர். ஆனாலும் அவன் மரணிக்க முன்னர் தனது சபதத்தை நிறைவேற்றி விட்டான். ராதா இன்று எம்மத்தியில் இல்லை. ஆனால் அவனின் சிரிப்பு, சொற்கள் சுறுசுறுப்பு எங்கள் மத்தியில் தவழ்ந்து கொண்டே இருக்கின்றன. அவன் எம்மத்தியில் இல்லை எனும் உணர்வு எமக்கு ஏற்பட இன்னும் பல காலமாகலாம்.

ஆம். அவன் வித்தியாசமானவன்.

வாழ்ந்தபோது மட்டுமல்ல மரணத்தின் போதும் அவன் வித்தியாசமானவன்

கே. கபில்

# — தாய் பூபதி —

தாய் பூபதி நினைவு பொது அறிவுத்தேர்வு.

தாய் பூபதி நினைவாக பொதுஅறிவுத்தேர்வு 15-3-92 அன்று நடந்தது.

தென் தமிழீழத்தில் கல்லோயாவில் (பட்டிப்பளை ஆறு) திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தொடர்ந்து 1961இல் உருவாக்கப்பட்ட புதியமாவட்டம் எது?

தெரியாது.

யாழ் முற்றவெளியில் காணப்படும்ஒன்பது நினைவுத் தூண்களும் யார் நினைவாக வைக்கப்பட்டன?

தெரியாது.

தென் தமிழீழத்தில் தோன்றி தமிழன், தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு என்ற பொது நோக்குடன் அயராது உழைத்த முத்தமிழ் வித்தகர் பெயர் என்ன?

தெரியாது.

'பொது அறிவு எனக்கு ஏன் வேண்டும்?' இது ஒரு மாணவனின் கேள்வி.

'இவை எல்லாம் எமக்குத் தெரிந்து என்ன பயன்' இதுஒரு மாணவியின் கேள்வி.

'பொது அறிவுத் தேர்வு கடுமை' இது ஆசிரியர்களின் கருத்து.

இவற்றிற்கு பலருக்கு பதில் தெரியவில்லை அறிய வேண்டும் என்ற ஆர்வம் இல்லை.

தேர்வுக்காக தனியார்கல்வி நிலையங்களை மூடி ஒத்துழையுங்கள் எனக் கேட்ட போது பெரிய அளவில் முணுமுணுப்புகள் கேட்டன.

20,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் இத்தேர்வில் கலந்து கொள்ள முன்வந்தார்கள்.

யாழ். கோட்டத்தில் முன்னணிப் பாடசாலைகள் என அழைக்கப்படும் பாடசாலைகளில் தோற்றியோர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சென்ஜோன்ஸ் கல்லூரி - 07
சுண்டுக்குளிமகளிர்கல்லூரி-46
வேம்படி மகளிர் கல்லூரி -124
மத்திய கல்லூரி - 193

அதேவேளை சொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து 903 மாணவர்கள் சிறிய பாடசாலையான சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தில் இருந்து 143 மாணவர்களும தேர்வில் கலந்து கொள்ள முன்வந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இத்தேர்வு சான்றிதழ் பெற்றால் வேலை வாய்ப்பு கிடைக்கும். வெளிநாடு செல்லலாம் என்றால் இப்பாடசாலை மாணவர்கள் எல்லோரும் தேர்வில் கலந்து கொண்டிருப்பார்கள்.

எம்மண்ணைப் பற்றி. மக்களைப் பற்றி, சூழலைப்பற்றி, போராட்டத்தைப் பற்றி அறிய ஏன் இந்த தயக்கம்.

## துடுப்பெடுத்தாட்டம்

கடந்த வெள்ளியும் (20-3-92) சனியும் (21-3-92) மிகப்பெரிய துடுப்பெடுத்தாட்டப் போட்டிகள் நடந்தன.

உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி, கூட்டுமுயற்சி. வெற்றி தோல்விகளை ஏற்கும் மனப்பாங்கு. கட்டுப்பாடு ஒழுங்கு என்பதே விளையாட்டின் நோக்கமாகும்.

கட்டுப்பாடு, ஒழுங்கு கல்விக்குப் பெயர் பெற்றதாக சொல்லப்படும் இப்பாடசாலைகளின் மாணவர்கள் சிலர் வீதி எங்கும் தங்கள் பாடசாலைகளின் மரியாதையை விலை கூறி விற்றார்கள்.

வீதிகளில் போட்டிக்கு என்ற பெயரில் மரியாதையாகப் பிச்சை எடுத்தார்கள். குடித்து மகிழ்ந்தார்கள். தாங்கள் வீதியில் நிற்கின்றோம் என்பதையும் மறந்தார்கள்.

ஒரு ஆண் பெண் வேடம் போட இரண்டு ஆண்கள் அவரை சூழ நிற்கின்றார்கள். வீடுகளில், வீதிகளில் மக்களை கண்ட போதெல்லாம் குறிப்பாக இளம் பெண்களைக் கண்ட போது முத்தமூட்டு நடித்தார்கள். சத்தமிட்டுக் குதித்தார்கள்.

ஒவ்வொரு முறையும் பந்து எல்லைக் கயிற்றைத் தொட்டதும் மைதானம் எல்லாம் ஆதரவாளர்கள் உருண்டார்கள்

சில துடுப்பெடுத்தாட்ட வீரர்களை தூக்கிக் குத்தினார்கள்.

தனியார் கல்வி நிலையங்கள் மகிழ்ச்சியோடு மூடப்பட்டன.

மத்திய கல்லூரி அணிக்கு நட்புப்படை வேம்படி மகளிர் கல்லூரி.

சென் ஜோன்ஸ் அணிக்கு நட்புப்படை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

தமது நட்பு அணிகள் வெல்ல வேண்டும் என இவர்கள் அணி திரண்டு நின்று ஆதரவு தந்தனர்.

பெருமளவில் ஒவ்வொரு அணியின் வெற்றிக்கு ஆதரவாக மக்கள் திரண்டனர்.

வீதிகளில் ஒழுங்கு குறைவுக்கும், மைதானத்தில் கட்டுப்பாடு சிதைவுக்கும் யார் பொறுப்பு?

இவர்கள் எல்லோரும் மாணவர்கள்.

இவர்களின் ஒழுங்கு, கட்டுப்பாட்டிற்கு. அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்களே பொறுப்பு.

தங்கள் பொறுப்பின்மைக்கான காரணங்களை யார் மீது இப்போது சுமத்துவார்கள்?

## மணலாற்றுச் சமர்

17-3-92 மணலாற்றில் மீண்டும் ஒரு பெரிய சமர் தொடங்கியது

வடதமிழீழத்தையும், தென் தமிழீழத்தையும் துண்டாட வேண்டும் என்ற சிறிலங்காவின் நீண்ட காலத் திட்டத்தை செயற் படுத்தவே இச்சமர் தொடங்கியது.

தமிழீழ விடுதலைப் புலிகளை அப்பகுதியில் செயலிழக்கச் செய்ய வேண்டும்.

அம்பாறையில் இருந்து பருத்தித்துறை வரை சேர்ந்த போராளிகள் சமரில் ஈடுபட்டனர்.

20-3-92- செய்தித்தாள்கள் 23க்கும் மேற்பட்ட போராளிகளின் வீரச் சாவு குறித்த செய்திகளை வெளியிட்டிருந்தன.

100க்கும் மேற்பட்ட போராளிகள் காயமடைந்திருந்தனர்.

இந்தியப் படை இங்கிருந்து கொலை கொள்ளை பாலியல் வன்முறையில் ஈடுபட்ட போது யாருமே தமிழீழப் போராட்டத்திற்கு வெளிப்படையாக பேசப் பயந்தார்கள்.

தாய் பூபதி போராடினார். தற்கொடையாளி திலீபனை இந்திய அரசு சாகவிட்டது என்பது அந்தத் தாய்க்குத் தெரியும்.

உளரீதியாக தாயின் போராட்டத்தை குழப்ப இந்தியா முழு முயற்சி எடுத்தது.

தன் முடிவை தெரிந்து கொண்டு தமிழ்மக்களின் தன்முடிவு உரிமைக்காக எங்கள் தாய் போராடினார்.

19-3-92 ல் இருந்து எங்கள் தாய் உண்ணா நோன்பிருந்த நாட்களை நினைவு கூருகின்றோம்.

துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் ஒரு அணி வெல்லும்

(6ஆம் பக்கம் பார்க்க)

**கௌசிகன்**

# நாற்பதுகள் தவறவிடப்பட்ட ஒரு யுகத்தின் தொடக்கம்

நாற்பதுகளை நினைவு கூர்வது இப்போது எங்களுக்கு அவசியம். அந்த நாற்பதுகள் அப்போது ஓர் இடைமாறு காலகட்டம். இப்போது தொண்ணூறுகளும் அவ்வாறே ஓர் இடையாறு காலகட்டம.

ஒரு காலத்தில் உணர்ச்சிமயமாகப் பார்த்த விடயங்களை இப்போது ஆற அமர இருந்து அறிவு மயமாகப் பார்க்கவேண்டியுள்ளது.

''காலமோ சித்திரை, நேரமோ பத்தரை நீங்களோ நித்திரை'' இப்படி அண்ணாத்துரையின் ஒரு வசனம்.

அண்ணா என்பது மூன்றெழுத்து, அன்பு என்பது மூன்றெழுத்து, காதல் என்பது மூன்றெழுத்து இப்படி கருணாநிதியின் ஒரு வசனம்.

விடுதலைவேண்டி' விமோசனம வேண்டி நின்ற மக்களை இப்படி அடுக்கு மொழிகளுக்குள்ளும், கவர்ச்சி வசனங்களுக்குள்ளும் சிக்கவைத்தன

நீங்கள் பிரிந்து சென்று ஒரு தனியரசு அமைக்க இப்போது தவறுவீர்களேயானால் உங்களால பின்பு ஒரு போதும் தனியரசமைக்க முடியாது என்று ஈ. வே. ராவிடம் ஜின்னா 1940களிற் குறிப்பிட்டார் இக்காலகட்டத்தில் ஈ, வே. ராவின் மொழிபெயர்ப்பாளராக விளங்கியவர் சி. என். அண்ணாத்துரை அண்ணாத்துரையைப் பார்த்து ஜின்னா குறிப்பிட்ட இன்னொரு தீர்க்க தரிசனத்தையும் இங்கு குறிப்பிடலாம். அண்ணாத்துரையின் கண்களைப் பார்த்து ''இந்தக் கண்கள் ஒரு காலம் தென்னகத்தை ஆளும்'' ஜின்னா கூறிய இரண்டு அப்படியே நடந்துள்ளன.

தென்னிந்தியாவின் புரட்சித் தீ ஈ. வே. ராவிடமும், அண்ணாத்துரையிடமும் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதனை அணைத்து விட்டனர்.

நாற்பதுகள் இரண்டாம் உலகமகா யுத்தம் நிகழ்ந்த. முடிந்த காலகட்டம்; காலனித்துவ ஆதிக்க அரசுகள் யுத்தத்தாற் பலவீனமுற்ற காலகட்டம்; ஆசிய-ஆபிரிக்க நாடுகளிற் தேசியப் போராட்டங்கள் முனைப்பிற காலகட்டம்; இந்த நாடுகள் சுதந்திரத்தின் பின் புதிய அரசுகளை நிர்மாணிப்பதில் ஈடுபட்ட காலகட்டம்; அமெரிக்காவும் சோவியத்யூனியனும் உலகப் பெருவல்லரசுகளாக முன்னணிக்கு வரத் தொடங்கிய காலகட்டம்; பொதுவில் உலகளாவியரீதியில் அரசியல் விழிப்புணர்வும் புதிய பாதைக்குமான தேடல் இடம்பெற்ற காலகட்டம்.

இந்தக்காலகட்டத்திற் காணப்பட்ட இந்திய இலங்கை அரசியற் சமூக நிலைவரங்களை நோக்குவோம்.

இந்தியாவில் காந்தி, நேரு, சுபாஸ், பட்டேல் போன்றோர் பரந்த இந்திய தேசந் தழுவிய தலைமைத்துவத்தை வகிக்கலாயினர். முஸ்லிம்கள் இந்தியாவிலிருந்து பிரிந்து தனியரசு அமைக்க வேண்டும். என்பதற்கான தலைமைத்துவத்தை ஜின்னா எடுக்கலானார். காமராஜர் தமிழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இந்திய தேசியத் தலைவராக இருந்தார். இச்சூழலில் தமிழகத்திற்கு தலைமை தாங்கும் பொறுப்பு ஈ. வே. ராவிடமும் அண்ணாத்துரையிடமும் விழலாயிற்று.

டி. எஸ், சேனநாயக்கா, எஸ். டபிள்யூ ஆர், டி. பண்டாரநாயக்கா, எஸ். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா முழு இலங்கைக்குமான தலைமைத்துவத்தில் ஈடுபடலாயினர். தமிழ் மக்களின் தலைமைத்துவம், ஜி. ஜி பொன்னம்பலம், எஸ். ஜே வி. செல்வநாயகம் போன்றோரின் கைகளில் விழலாயிற்று. சுதந்திரத்தின் பின்பு பாகிஸ்தானின் ஒரு மாகாணமாக இருந்த கிழக்கு வங்காளம் மேற்குப் பாகிஸ்தானுடன் முரண்படலாயிற்று மொத்தத்தில் சுதந்திரத்தின் பின்பு தென்னாசியா முழுவதும் உள்நாட்டிற் தேசிய இனப்பிரச்சினை பெரிதும் தலையெடுக்கலாயிற்று

புதிய யுகத்திற்கு ஒரு புதிய கண்ணோட்டம் தேவைப்பட்டது. மாறிக் கொண்டிருந்த அந்தப் புதிய உலகத்தை எம்மவரில் யாரும் உள்வாங்கிக் கொள்ளவில்லை; முன்னுணரவில்லை எதிர்வு கூறவில்லை. தென்னாசியாவின் தேசிய இனங்களின் தலை விதி என்ன என்பது சரிவரச்சிந்திக்கப்படவில்லை. பல்தேசிய இன அரசமைப்புக்குள்தேசிய இனங்களின்வாழ்வும், சிறுபான்மை இனங்களின் கதியும் எவ்வாறாக அமைய வேண்டும் என்பது பற்றி ஆழமான கருத்தோட்டங்கள் உருவாகவில்லை. பண்டைய பெருமைகள் பற்றிய கவர்ச்சிகரமான, உணர்ச்சிவசமான, கோசங்களும், இனக்குழுக்களின் போட்டி மனப்பாங்கும் தான் தென்னாசியா முழுவதும் பரவலாகக் காணப்பட்டது, ஏட்டிக்குப் போட்டியான குழுஉணர்வுகள் மேலோங்கினவே தவிர சமூக வளர்ச்சிக்கான யதார்த்த பூர்வமான எண்ணக்கருக்கள் தோன்ற மறுத்தன. அளவாற் பெரிய இனங்களின் ஒடுக்குமுறைகளும் அதிகரித்தன. குறிப்பாக இந்தியாவின் வடக்கு, வடகிழக்குப் பகுதியில் இனக்குழுக்களும், மலைவாழ் மக்களும் தேசிய இனங்களாக பரிணமிக்கும் போக்குக்கு எதிரானதாக இந்திய மத்திய அரசின்அரசியல் ஆதிக்கம்காணப்பட்டது.

பொதுவாக தென்னாசியா முழுவதுமுள்ள தேசிய, தேசிய சிறுபான்மை இனங்களின் விமோசனத்திற்கான முன்னுதாரண அணியினராகத் திகழ வேண்டிய பொறுப்பும் வாய்ப்பும் தென்னிந்தியர்களுக்கு இருந்தது. ஒரு புறம் ஒடுக்கப்படுபவர்களாகவும் மறுபுறம் சக்திவாய்ந்த இனமாகவும் அளவால் கணிசமான அளவு பருமனைக் கொண்டவர்கள் என்பதனாலும், இதற்கேற்ப சில புவியியற் சிறப்புக் கூறுகளைக் கொண்டவர்களாய் உள்ளதனாலும் தென்னிந்தியர் தேசிய இனங்களின் பிரச்சினை சம்பந்தமாக ஒரு முன்னணிப் பாத்திரத்தை வகித்திருக்க முடியும். அது ஒடுக்கப்படும் ஏனைய தென்னாசிய இனங்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் அமைந்திருக்கும் என்பதுடன் இன ஒடுக்குமுறை மட்டத்தில் உருவாகவும் இல்லை. ''பரந்த தேசியம்'' என்பதே அரசியல் - அறிவியல் நாகரிகமெனக் கருதப்படலாயிற்று தீவிர வலது சாரிகளும், இடது சாரிகளும் இதில் ஒரே விதமான கருத்தோட்டத்தையே கொண்டிருந்தனர். இச்சூழலில் தேசிய இனங்களின் பிரச்சினைக்காக வாதிடும் துணிகரத்தை அறிவியலாளர் இழந்தனர்.

பிரிந்து செல்லும் உரிமை, அரைச் சமஷ்டி, முழுச் சமஷ்டி, மொழி உரிமை, ஒற்றையாட்சிஅமைப்பு, இப்படிப் பலதரப்பட்ட அபிப்பிராயங்களும் ஊசலாட்டங்களும் அரசியல் வாதிகள் மத்தியில் இருந்தது இத்தகைய பின்னணியில் ஊசலாட்டத்துடன் திராவிட நாட்டுக் கோரிக்கையை அண்ணாத்துரை முன்வைத்தார்.

அண்ணாத்துரை அரசியற் தலைமைத்துவத்தை ஏற்க முற்பட்ட காலகட்டம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டம் வெள்ளையரின் ஆதிக்கத்திற்கு எதிராக மட்டும் தென்னிந்தியர் அரசியல் உணர்வு ஊட்டப்பட்டிருந்தனர் நிலஉடைமை ஆதிக்கத்தின் கொடுங்கோன்மையும் கொத்தடிமை முறையும் நிலமற்ற விவசாயிகளின் துயரமும், பிராமணிய ஆதிக்கமும், சாதி முறையின் தட்டமைப்புக்களும் வட இந்தியாவின் அரசியல் ஆதிக்கமும், மக்களின் அரசியற்-சமூகஅறியாமைகளும் முழுவடிவில் பண்ணடிமை முறையும், இயந்திரத் தொழிற் துறையின் வளர்ச்சியில் தொழிலாளர்கள் பிழிந்தெடுக்கப்பட்டமையும் நிறைந்த காலகட்டம் இத்தகைய பல்பரிமாணப் பிரச்சி

(6ஆம் பக்கம் பார்க்க)

**மு. திருநாவுக்கரசு**

> நாற்பதுகளில் உலக மகா யுத்தம் நிகழ்ந்தது. அதில் ஐரோப்பா கருகியது. நாங்கள் அதிற் கருகாது இருந்தோம் ஆனால் அந்த நாற்பதுகளில் எங்கள் கண்களை எங்கள் கரங்களால் நாங்கள் கட்டிக் கொண்டோம். ஆதலால் ஐம்பது ஆண்டுகளாக நெருப்பில் நாங்கள் நடக்கிறோம். கருகிய ஐரோப்பா காயத்தை ஆற்றிக் கொண்டு உலகை இன்று நடப்பிக்கின்றது. ஏனெனில் அது தனது கண்களைக் கட்டாது புதிய போக்குக்குத் தயாரானதாற்றான்.

# குதூகலம்

### பாவம் கொர்பி

கொர்பசேவ் ஒருமுறை அமெரிக்காவுக்குப் போயிருந்த வேளை சனநெருக்கமான தெருவில் நடந்து கொண்டிருந்தார். ஒரு சிறுமி, கையில் இரண்டு நாய்க்குட்டிகளுடன் அவர் முன் போய், 'சார். இந்தக் குட்டிகளை வாங்குவீர்களா, இவை கொம்யூனிஸ்ற் பப்பிகள்' என்றாள். சினங்கொண்ட கொர்பி பேசாமல் போய்விட்டார். மறுநாள் அமெரிக்க அதிபர் புஷ் உடன் போய்க் கொண்டிருந்த போது அந்த சிறுமியைச் சந்தித்தார். கொர்பசேவ் சிறுமியைப் பார்த்து 'உன் நாயைப் பற்றி உன் அதிபரிடம் சொல்லு' என்றார்.

'இவை ஜனநாயகக் குட்டிகள்' என்றாள் சிறுமி புன்சிரிப்புடன்,

'என்ன முன்னர் கொம்யூனிஸ்ற் குட்டி என்றாயே' என சத்தமிட்டார் கொர்பி.

'ஓ... இப்ப அவை தம் கண்களைத் திறந்து கொண்டன' என்றாள் சிறுமி.

★ ★

### பரிசுப்பல்

பரிசுப் பொருள்கள் விற்கும் கடையில். அந்தப் பெண் ஒரு அதிசய 'நெக்லேஸ்' இருக்கக் கண்டு, விற்பனையாளரிடம் போய் அது எதனால் செய்யப்பட்டது? என்று கேட்டாள்.

'முதலையின் பற்களால் ஆனது' என்றான் விற்பனையாளன்.

ஆனால் அதன் விலை முத்து நெக்லேசை விட அதிகம் போல்த் தெரிகிறதே?' என்று கேட்டாள் அவள்.

சரி; ஒரு சிப்பியை எவரும் சுலபமாகத் திறக்க முடியுமே' என்றான், அவன்.

★ ★

### கி. மு. 1286

ஒரு அரும்பொருள் காட்சியகத்தில் இருந்த பண்டைய அடக்கப் பெட்டியில், 1286 B. C. எனப் பொறிக்கப்பட்டிருந்ததை இரு சிறுவர்கள் அவதானித்தனர்.

'அந்த இலக்கத்தின் அர்த்தம் என்ன'? என்று ஒருவன் கேட்டான் தன் நண்பனிடம்.

அது, ஒருவேளை அவனை அடித்த கார் இலக்கமாக இருக்கும்' என்றான் மற்றவன்'

★ ★

### நீண்டகாலம் வாழ

ஒரு வைத்தியர் தான் சோதித்த நோயாளியைப் பார்த்து, 'இன்னும் ஆறு மாதம்தான் நீ உயிர் வாழ முடியும்', என்றார்.

அதிர்ச்சியடைந்த நோயாளி டொக்ரர் அதற்கு நான் ஏதாவது செய்ய முடியுமா? என்று கேட்டார்.

'முடியும்', என அமைதியாக கூறிய வைத்தியர் தொடர்ந்து, 'முதலில் உன் சொத்துக்களையெல்லாம் ஏழைகளுக்குக்கொடு, அடுத்து கிராமப் பகுதிக்குப்போய் ஒரு அமைதியான இடத்தில் வீடு பார்த்து இரு, பிறகு ஒன்பது பிள்ளைகளுடன் ஒரு விதவையைக் கலியாணம் செய்து கொள்

'இதெல்லாம் எனக்கு அதிக

**எஸ். பி. கே.**

ஆயுளைத் தருமா டொக்ரர்...?'

'இல்லை ... ஆனால் அது உன் வாழ்விலேயே நீண்ட ஆறு மாதமாக இருக்கும்.

★ ★

### உருமாறியதால்

ஒரு அமெரிக்கத் தொழிலாளி தன் சக தொழிலாளிக்கு சொன்னான்- 'உனக்கு மட்டும் பிரச்சினை இருக்கிறதென்று எண்ணுகின்றாயா?. ஒருவன் பிளாஸ்ரிக் வைத்தியம் செய்யவென்று கடன் கேட்டான், அவனுக்கு 3000 டொலர் கடன் கொடுத்தேன். இப்போ அவன் எப்படி இருக்கிறான் என்று தெரியவில்லையே.'

★ ★

கேள்வி:

கிழக்கு ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

பதில்:

அமெரிக்காவில் ஒரு கொம்யூனிஸ்ற் கட்சி உண்டு.


# அந்தியேட்டிக்கிரியையும் சபிண்டீகரண அழைப்பும்

அன்னை மடியில் 5 — 11 — 1934



முருகன் அடியில் 14 — 3 — 1992

அமரர்

## பொ. பாலேந்திரா ஐயர்

தொண்டமானாறு செல்லச்சந்நிதி ஆலயக் குருக்கள் பொ. பாலேந்திரா ஐயரின் ஆத்ம சாந்திக்கான அந்தியேட்டிக் கிரியையும் சபிண்டீகரணமும் 27-3-92 இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் தொண்டமானாறு வல்லைறோட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

திரு. பொ. பாலேந்திராஐயர் மனைவி, உறவினர்கள்,

தொண்டமானாறு. [சி-4102]


### நாற்பதுகள்

ஊனகளுக்கும் தீர்வு தேவைப்பட்டகாலம் அரசியல், மொழி மற்றும் கலாசாரத் தளங்களில் இந்தியாவின் தென்னிந்தியமும். இலங்கையில் தமிழரும் ஒரே மாதிரியாகப் புறக்கணிக்கப்பட்ட காலம். இந்திய வரலாறென்றால் வட இந்திய வரலாறென்றும், இலங்கை வரலாறென்றால் தென்னிலங்கை வரலாறென்றும்ஒரே மாதிரியான கருத்துக்கள்வளர்ந்திருந்த காலம். இன ஒடுக்குமுறைக்கான கருத்தோட்டத்தில் வரலாறு ஒரு மையம்.

வட இந்தியா தொடர்ந்து அந்நியப் படையெடுப்புக்களுக்கு இரையாகும் புவியியல் அமைவிடத்தைக் கொண்ட ஒரு பகுதி. ஆதலால் வட இந்தியாவில் உருவான இந்தோ-ஆரியக் கலாசாரம் தென்னிந்தியாவைத் தனது புகலிடமாக்கிக் கொண்டது. இந்த வகையில் கலாசாரத் துறையில் ஏற்பட்ட வட இந்திய செல்வாக்கைத் தான் ''ஆரிய'' எதிர்ப்பு என்ற வடிவில் அண்ணாத்துரை முதன்மைப்படுத்தினாரே தவிர தென்னிந்திய மக்களின் ஏனைய பிரச்சினைகளைக் கருத்தில் எடுத்து அவர் தலைமை கொடுக்கவில்லை.

ஏகக் கொதிநிலையில் தென்னிந்தியா இருந்த சூழலில் அண்ணா தலைமை பூண்டார் திராவிட நாட்டுக் கோரிக்கையில் அண்ணா எவ்வளவு தூரம் பற்றுடன் செயற்பட்டார் என்பது ஆராயப்பட வேண்டிய விடயம். அண்ணாவின் அரசியல் அபிலாசை இதற்கொரு காரணமாய் இருந்ததா என்பது ஒருகேள்வி அது இப்போதைக்குச் சந்தேகமாக மட்டுமே இருக்கட்டும்.

திராவிட நாட்டுக்கோரிக்கையை அண்ணா முன்வைத்தார். மக்கள் இவரின் பின்னால் அணிதிரளலாயினர். பிராமணிய எதிர்ப்பும் இதில் ஓர் அம்சம். கலை இலக்கியத்தை இதன் பொருட்டு திருப்பலானார். நாடகம், திரைப்படம் என்பன இதிற் சக்திவாய்ந்த அம்சங்களாய் மாறின. மக்கள் பெருந்திரளாய் அண்ணா பக்கம் போவதைக்கண்ட நேரு அரசாங்கம் திராவிட நாட்டுக் கோரிக்கையை தடைசெய்தது. மக்கள் போராடத்தயாராய் இருந்தனர். ஆனால் அண்ணா தயாராய் இருக்கவில்லை. காஞ்சியில் பெருமாநாடு கூடி திராவிடநாட்டுக் கோரிக்கையை கைவிடுவதாக அறிவித்து தேர்தலையே நோக்கமாகக்கொண்டார் இதுவரை ஓர் அம்சமாக இருந்த பிராமணிய எதிர்ப்பே இப்போது பெரும் முதன்மையான தளமாகியது. இந்திய - சீன யுத்தமும் திராவிட நாட்டுக் கோரிக்கையை பின்தள்ள ஒரு புறக்காரணியாய் அமைந்தது. அண்ணா தமிழக முதல்வர் ஆனார் தமிழகத்தின் கொதிநிலையும் அடங்கலாயிற்று.

கலாசாரத் தளத்தில் ஒரு மாற்றத்தைத் தவிர, மற்றெல்லா வழிகளிலும் பழைய சமூகம். பழைய சிந்தனை, பழைய வாழ்க்கை முறை, பழைய துயரங்கள் தொடர்ந்தும் நீடித்தன. நில உடைமையும், சொத்தடிமை முறையும் மாறி ஒடுக்கு முறைகளும், பெண்ணடிமைத்தனமும், வடக்கின் கையில் அரசியல் அதிகாரமும் தொடர்ந்து மேலோங்கின. ஒரு முழுச் சமஷ்டியைத்தானும் அரசியல் ரீதியாக ஏற்படுத்த அண்ணா தயாராய் இருக்கவில்லை.

தமிழக மக்கள் உணர்ச்சிப் பிளம்புகளாக்கப்பட்டனர். கலையையும் இலக்கியத்தையும் தனது நோக்கத்திற்கேற்ப அண்ணா மெலினப்படுத்தினார். தென்னிந்தியாவின் புரட்சிச் சூழலை அண்ணா தணித்தார். இந்த முன்னுதாரணத்துடன் தென்னாசியாவில் தேசிய இனங்களின் உரிமைப்போராட்டம் சோகமாய்ச் சரிந்தது. ஈழத்தமிழரும் இதனையே முன்னுதாரணமாகக் கொண்டனர்.

1940 களின் சூழலில் குறைந்த பட்சம் சமஷ்டி ஆட்சி முறையை தேசிய இனங்களின் தலைவர்களும் அதனைச் சார்ந்த அறிவியலாளர்களும் முன்வைத்திருப்பார்களேயானால் ஈ. வே. ராவும், அண்ணாத்துரையும் அதிலாவது உறுதியாக நின்றிருப்பார்களானால் திட்டவட்டமாக, நூற்றுக்குநூறு அதிலாவது வெற்றியீட்டியிருக்க முடியும். இடைமாறு கால சட்டத்திற்குரிய கால கட்ட சிந்தனையை அவர்கள் கொண்டிருக்கவில்லை. தேசிய இனங்களின் பிரச்சினையும் சமூகத்தின் ஏனைய பிரச்சினைகளும் பல்பரிமாணத்துடன் இணைக்கப்படாது சிந்தனைத் தெளிவற்ற சந்தர்ப்பவாதமே தென்னாசியாவில் மலிந்திருந்தது வீண் பெருமைக்காக கடந்த காலப் பொன் விலங்குகளைத் தேடியெடுத்து எமது கரங்களை நாங்களே பூட்டிக் கொள்ள வேண்டியதிலலை. ஒவ்வொரு புதிய யுகமும் ஒரு புதிய மாற்றத்தைக் கோரி நிற்கும்.

### தாய் பூபதி

அல்லது தோற்கும். யாருக்கும் பாதிப்பில்லை.

அடுத்த ஆண்டு மீண்டும் விளையாடலாம் இருந்தும் தம் அணி வெல்ல வேண்டும் என்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டப்பட்டது.

மணலாற்றுச் சமரில் எம் படை அணி தோற்கக் கூடாது. தோற்றால் மணலாறும் இல்லை எம் தாய் மண்ணும் இல்லை.

மணலாற்று சமரில் போராளிகளோடு கலந்து கொள்ள யாரும் வரவில்லை.. சமருக்கு ஆதரவாக நட்புப் படைகள வரவில்லை.

பாடசாலைகள் மூடப்படவில்லை

தனியார் கல்வி நிலையங்கள் மூடப்படவில்லை மக்கள் திரளவில்லை.

விளையாட்டு கற்றுத்தரும் உடல்வளர்ச்சி உளவளர்ச்சி, கூட்டு வாழ்க்கை, கட்டுப்பாடு, ஒழுங்கு எதையும் காணவில்லை.

தமிழீழ மண்ணை ஏன் நேசிக்க முடியவில்லை. கூட்டு வாழ்க்கை ஏன் புரியவில்லை; கட்டுப்பாடு ஒழுங்கு வேலை ஏன் தெரியவில்லை.

இந்த மண்ணில் என்ன நடக்கின்றது?

யாராவது ஒருவருக்கு இக் கேள்விக்கு பதில் கிடைத்து அது அவர் மனச்சாட்சியை உறுத்துமாயின் அதுவே இக் கட்டுரையின் நோக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

### கரங்கள்

கள். கல்வி நிறுவனங்கள், சாதாரண மனிதர்- இவை எல்லாவற்றையும் சம்பந்தப்படுத்திய பணி.

சாரணர், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆகியவற்றின் சேவைகள்வித்தியாசமானவை இந்த அமைப்புகள் அக்கறையுடன் கூடிய சேவையை வெளிப்படுத்த ஏலவே பயிற்றப்பட்டவர்கள். சாரணர்களுக்குத் தமது சேவையிலுள்ள அக்கறையையும் அவர்கள் சேவையை அணுகும் சிரத்தையையும் பாராட்டிப் பேசுகிறார் கரங்கள் பொறுப்பாளர் சோழன். ஒரு பார்வையில் சாரணர் அமைப்பின் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபுவின் எண்ணங்கள் இங்கு தான் உணரப்படுகின்றன.

யுத்த களத்தில் அல்லது போர்க்காலத்தில் போராளிகளுக்கும், மக்களுக்கும் ஏற்படும் தேவைகளை வரிசைக்கிரமமாகப் பட்டியல் போடுவது இயலாதகாரியம் இருந்தும்போர்க்களத்தில் காயப்படுபவர்களுக்குத் தேவையான பராமரிப்பு, உலர்உணவு சேகரிப்பு மற்றும் காவலரண் அமைத்தற்கான உபகரணங்கள் சேகரித்தல் அதனை அமைத்தல் போன்ற இன்னோரென்ன பணிகளை, அது எதுவாயினும் அதனைக் கரங்கள் ஆற்றுகின்றன.

இன்றைய இந்தச் சூழ்நிலையில தளராத உள்ளம், உழைப்பு எதற்கும் முகம் கொடுக்கும் ஆற்றல், திட்டமிட்டுச் செயலாற்றும் இயல்பு ஆகிய பண்புகளுடன் கரங்கள் செயலாற்றி வருகின்றது. உதாரணமாக-

- ★ பொதுவான இடங்களில் பதுங்குகுழிகளை அமைப்பது'
- ★ சரியான தகவல்களைத் தெரிவித்தல். பயப்பிராந்தியைஏற்படுத்தும் வீணவதந்திகளைப் பரவாது தடுத்தல்.
- ★ போர்க்காலத்தில் தமது பங்களிப்பை வழங்கலாம் என்று விரும்வர்களுக்கு ஒரு ஊடகமாகச் செயற்படுதல்.
- ★ இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்படும் மற்றும் காயமடையும் போராளிகளையும், பொதுமக்களையும் பராமரித்தல்
- ★ உளத்தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு மனோவியல் யுத்தத்தில்அரசு ஈடுபடுகின்றது. மக்கள் மத்தியில் உயர்ந்த மனித மதிப்பீடுகளையும் நம்பிக்கையையும் உருவாக்குதல்.
- ★ நெருக்கடி நிலைக்கு ஏற்றபடி திட்டங்களை வைத்து இயங்குதல்.
- ★ போர்க்காலச் சேவையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு சுழற்சி முறையில் பணிகளை வழங்குதல்.

கரங்கள், அதன் 'கரங்களை' அகல விரித்துள்ளது. சமயப் பிரிவுகளோடு அதிகமாகத் தொடர்பு கொண்டு பணியாற்றுகின்றார்கள். கரங்கள் மக்களின் உதவியை விரும்பு

(2ஆம் பக்கம் பார்க்க)


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 — 09 — 1954



மறைவு 27 — 03 — 1990

## சிவராமலிங்கம் சிவமோகன்

(ராஜாஜி)

ஆண்டு இரண்டு ஆனாலும்
நீள நினைக்கும்

''தணிகை''
28, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், பெற்றோர்,
தம்பி, உற்றார், உறவினர்.

(சி4090)

# இராணுவ பாதுகாப்புடன் கூடிய குடியேற்றம்;

# தமிழர் தாயகத்தை சிதைக்கும் தந்திரோபாயம்

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக இராணுவ அணுகுமுறைஒன்றையே தீவிரமாகப் பற்றி நிற்கும் சிறிலங்கா அரசாங்கம் அதற்கு இணையாக தமிழர் பிரதேசங்களில்சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி தமிழர் தாயகத்தைச் சிதைக்கவும்பிரதேசங்களைத் துண்டாடவும் தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றது; தமிழர் தாயகத்தை குடியேற்றங்கள்மூலம் துண்டாடுவதும் தமிழர் தாயகத்தைச் சிதைப்பதுமான சிறிலங்கா அரசாங்கத்தின் கோட்பாடானது பழையதானாலும் இன்று இராணுவத் தீர்வை விட குடியேற்றத்திட்டமே தமிழர் தேசிய இனப்பிரச்சினையை வேரோடு அழித்தொழிக்க ஏதுவானவாய்ப்பு என சிறிலங்கா அரசாங்கமும் சிங்கள புத்திஜீவிகளும் அதிகாரிகளும் கருதுகின்றார்கள்.

## புதிய குடியேற்ற நடவடிக்கைகள்

திருமலை மாவட்டத்தினுள் அடங்கும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் 'அ'பிரிவு நடவடிக்கைகளை ஆரம்பிக்க சிறிலங்கா அரசாங்கம் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்திடம் நிதி உதவி பெறுவதில் தீவிரகவனம் செலுத்துகின்றது. உத்தேச மகாவலிப் பிரிவு 'அ' பிரிவின் கீழ் மகாவலி கங்கைக்கு குறுக்காக 'கண்கமுக' என்னும் இடத்தில் அணை ஒன்று கட்டப்படும். இதிலிருந்து சேருவாவெல கந்தளாய்ப் பகுதியில் உள்ள.52,880ஏக்கர்நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் வழங்கப்படும். இவ்வாறு நீர்ப்பாசனம் பெறும் பகுதியில், 15,000 சிங்கள குடும்பங்களைக் குடியேற்றுவதே அரசாங்கத்தின் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் தோப்பூர், கிளிவெட்டி, ஈச்சிலம்பத்தை, பட்டித்திடல், தெஹிவத்தை பகுதிகளும்உள்ளடங்குகின்றன.

இதேவேளை வவுனியா மாவட்டத்திலும் அரசாங்கம் தீவிர சிங்கள குடியேற்றநடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இக்குடியேற்றங்கள் வவுனியாநகரை அண்டிய பகுதிகளிலும்,செட்டிகுளம்அரசாங்க அதிபர் பிரிவிலும் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றன.இதற்காக வவுனியாமாவட்டத்தில் 2,280 நிலத்துண்டுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. காணியற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்குதல் என்ற அடிப்படையில் சிங்களக் குடும்பங்கள் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக் குடியேற்றத்திட்டத்திற்கு தேசிய நீர்ப்பாசன புனரமைப்புத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 200 கோடி ரூபாவில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் தமிழர் தேசிய பிரச்சினை கூர்மை அடைந்த பின்னர்உருவான தொன்றல்ல. தமிழர் தேசிய இனப்பிரச்சினை ஆயுதப்போராட்டமாக விரிவடைவதற்கு வித்திட்ட நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். விவசாய அபிவிருத்தி என்ற போர்வையில். 1948 ஆம் ஆண்டிலேயே தமிழர் தாயக நிலப்பரப்பு ஆக்கிரமிப்புத் திட்டங்களை சிங்கள அரசாங்கம் மேற்கொண்டன. அப்பொழுது இத்திட்டங்களில் கல்லோயா,கந்தளாய் அல்லை அபிவிருத்தித்திட்டங்கள் முக்கியபங்காற்றின. இம் மூன்று திட்டங்களில் சுமார் 25,000 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இதே போன்று பதவியாவிலும் குடியேற்றத்திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டு சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்து அது டி. எஸ். சேனநாயக்காவாக இருந்தால் என்ன? ஜே. ஆர். ஜெயவர்த்தனாவாக இருந்தால் என்ன பிரேமதாசாவாக இருந்தால் என்ன, தமிழர் தாயகத்தை துண்டாடி விடுதல் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

## குடியேற்றமே ஒரே வழி

ஆனால், அரசியல்வாதிகள் மட்டும்தான் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. சிங்களப் புத்தி ஜீவிகள் மட்டத்திலும், அதிகாரிகளும், இராணுவத்தினர் மட்டத்திலும் தமிழர் தாயகத்தைஎவ்வாறு ஆக்கிரமிப்பது என்பது குறித்து நீண்ட காலமாக ஆலோசனைகள் இடம் பெற்றே வந்துள்ளன. இவற்றிற்கான முயற்சிகளை அரசியல் வாதிகள், அரசாங்கம். சட்டதிட்டங்கள் எவ்பனவற்றையும் மீறிச் சிங்கள உயர் அதிகாரிகள் செய்தும் வந்துள்ளனர்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் உயர் அதிகாரிகள் குழு ஒன்று இரகசியக் குடியேற்றத்திட்ட நடவடிக்கை ஒன்றை செயற்படுத்தத் திட்டமிட்டுச் செயலாற்றியது. இத்திட்டத்தை உருவாக்கியவர்களில் சர்வதேசரீதியாகப் பெரும் பதவிகளில் அமர்ந்திருந்தோரும், உள் நாட்டில் பேராசிரியர் பதவிகளில் இருப்போரும் மற்றும் புத்தி ஜீவிகளும், உயர் அதிகாரிகளும் அடங்குவர். இவர்களால் தமிழ் மாவட்டங்களை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து தமிழர் தாயகப் பகுதியை துண்டாடுவதற்கான நீண்ட காலத் திட்டம்ஒன்றை இவர்கள் தயாரித்து நீண்ட கால அடிப்படையில நடைமுறைப் படுத்துவதற்குரிய அடுத்த கட்ட ஒழுங்குகளைச் செய்யுமாறு இரகசியமாக மகாவலி அமைச்சிடம் சமர்ப்பிக்கப் பட்டது.

இந்த இரகசியத் திட்டம் வெளிவந்த போது, பெரும் எதிர்ப்பு கிளம்பியதினால் அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டது. இருப்பினும் சில உயர் அதிகாரிகளால அது இரகசியமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்குப் பிரதான சூத்திரதாரியாக மலிங்க ஹேர்மன் குணரட்னா இருந்தார்.

## இராணுவ அதிகாரிகளும் அக்கறை

இதேவேளை, இராணுவ அதிகாரிகளும் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு குடியேற்றங்களை அமைப்பதே சிறந்த வழி எனக் கருதுகின்றார்கள். சிங்கள குடியேற்றங்கள் இரகசியமாக நிறுவுவதில் ஈடுபட்டிருந்த மலிங்க ஹேர்மன் குணரட்னா தான் சந்தித்த இராணுவ சிரேஷ்ட அதிகாரி ஒருவர்



தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்ய வேண்டும் என்பதில் சிங்கள அரசியல்வாதிகள், புத்தி ஜீவிகள், உயர் அரச அதிகாரிகள் என்பேருக்கு இடையில் கருத்து வேறுபாடு கிடையாது. தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதும், சிதைப்பதுமே, தமிழர் போராட்டத்தை அழித்தொழிக்க ஒரேவழி என்பது அவர்களின் கருத்தாகும்

ஈழப்போராட்டத்தை அழிப்பதற்கு குடியேற்றங்களை நிறுவுவதே ஒரே வழி எனக் குறிப்பிட்டதாகத் தெரிவித்துள்ளார். குடியேற்றத்தின் மூலம் ஈழக் கோட்பாட்டின் அடிப்படையே அழிக்கப்பட்டு விடும் என இராணுவ அதிகாரி குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1948 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படும் குடியேற்றத்திட்டங்களின் பிரதான இலக்கு தமிழர் தாயகத்தை நான்கு, ஐந்து துண்டுகளாகப் பிரித்து விடுவதேயாகும்.இதனைத் தமிழர்தாயகப்பிரதேசத்தில்ஒடுங்கியநிலப்பரப்பை - கடற் பரப்பிற்கும் சிங்கள நிர்வாக மாவட்டங்களுக்கும் இடையில் உள்ள ஒருசில பகுதிகளை -ஆற்றுவடி நில அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி என்பதன் மூலமும் ஆக்கிரமிப்பின் மூலமும் நிறைவேற்றலாம் என சிங்கள புத்தி ஜீவிகள் கருதுகின்றார்கள்.

இரகசிய ஆக்கிமிரப்பு வகுத்த சிங்களப் புத்தி ஜீவிகள், அதிகாரிகளும் மல்வதது ஓயா, யான்ஓயா, மதுருஓயா ஆகிய ஆற்றுவடி நிலங்களை, மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்துடன் இணைத்து அப் பகுதியில் சிங்களக்குடியேற்றங்களை நிறுவுவதன்மூலம் தமிழர் தாயகத்தைத் துண்டாடலாம் எனத் திட்டமிட்டுச்செயலாற்றினர். ஆயிரக்கணக்கில் சிங்களக் குடியேற்ற வாசிகளை குடி அமர்த்தினர். ஆனால், புலிகளின் ஆயுதப் போராட்டம் அவர்களுக்குப் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதாக அமைந்தது.

சிங்களக்குடியேற்றத்தின்இரகசிய வேலைத்திட்டத்தின்சூத்திரதாரியான எம். எச் குணரட்னா தமது யான் ஓயா மதுறு ஓயா குடியேற்றத்திட்டங்கள் வெற்றி பெற்றிருக்குமானால், தமிழீழக் கோரிக்கையின் அடிப்படையை அழித்திருப்போம் என்றார்

எம். எச். குணரெட்னா கூறியதில் எந்தவித தப்பும் இல்லை. விடுதலைப்புலிகள் போராட்டத்தை தீவிரப்படுத்தாவிட்டால் இக் குடியேற்றங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கும் திருமலை மாவட்டம் யான் ஓயா திட்டத்தினால்-வெலிஓயா திட்டம்-வடமாகாணத்தில் இருந்தும், மதுறு ஓயாத் திட்டத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தும்- பிரிக்கப்பட்டிருக்கும். போராட்டம் பலவீனப்பட்டுப் போய் சிதைந்து போயிருக்கும் திருமலைமாவட்டம் முற்றிலுமாக சிங்கள மயமாகியிருக்கும்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை முழுமையாக நம்பியிருந்த சிறிலங்கா அரசாங்கம் அதனால் தீர்வு காணப்பட முடியாது என்பதை உணர்ந்துள்ளது. இந்நிலையில் வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கையுடன் சேர்த்து சிங்களக் குடியேற்றங்களை ஸ்தாபிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம்என அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிகின்றது இதனால் குடியேற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் நிலத்தை ஆக்கிரமிப்பதோடுஇன விகிதாசாரத்தை மாற்றுவதன் மூலமும் தமிழீழக் கோரிக்கைகளைத் தோற்கடித்து விடலாம் என எண்ணுகின்றது.

## நேரடி எதிரிகளாக மாற்றும் தந்திரம்

இதற்கென சிங்கள மக்களை ஆயுத பாணிகளாக்கி குடியேற் றங்களை நிறுவியதுடன் அதற்கு துணையாக இராணுவத்தினரையும் பயன்படுத்திவருகிறது. சிறிலங்காவின் நடவடிக்கையானது சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் நேரடி எதிரிகளாக்கி விடுவதாகும் இதனால் சிங்கள மக்கள் நேரடியாக மோதி தமிழ் மக்களை அழிக்க திட்டமிடுகின்றது. அதாவது கடந்த காலங்களைப் போன்று இனக் கலவரங்கள் மூலம் தமிழ் மக்களை அவர்கள் தாயகத்தில் இருந்து விரட்டத் திட்டமிட்டு செயலாற்றுகின்றது.

இதேவேளை குடியேற்றங்களில் இராணுவப் பாதுகாப்புடனும் ஆயுதம் தரித்த நிலையிலும் ஒரிருதலைமுறைகள் குடியேற்றவாசிகள் தமதுவாழ்க்கையை ஓட்டிவிட்டால் பின்னர் அவர்களுக்கு அம்மண்ணே தமது சொந்த மண் என்ற உணர்வுஏற்பட்டுவிடும். அவர்களை அம்மண்ணில் இருந்து வெளியேற்றுவது என்பது இயலாத காரியமாகிவிடக் கூடும். எடுத்துக்காட்டாக கந்தளாயிலும்பதவியாவிலும்குடியேறிய சிங்களவர்கள் இன்று ஒரிருதலைமுறைகளைக் கடந்து விட்டார்கள் அவர்களை இன்று அப்பகுதியில் இருந்து வெளியேறுவார்கள் என்றோ அல்லதுஅதனைதமிழர் தாயகம் என்றோ தாம் குடியேற்ற வாசிகள் என்றோ ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எமது மண்ணில் இருந்து பெற்ற அறுவடையைத் தின்று கொண்டே எமக்கு எதிராகப் போராடுவார்கள்; போராடுகின்றார்கள்.

இன்று இவற்றின் அனுபவ ரீதியான வெளிப்பாடே சிங்கள அரசாங்கத்தின் புதிய விரைவுபடுத்தப்பட்ட சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகளாகும். தோல்வியில் முடிவடைந்த மதுறு ஓயா திட்டத்திற்குப் பதிலாக தற்பொழுது மகாவலிதிட்டத்தின் 'அ' பிரிவை செயற்படுத்த அரசாங்கம் திட்டமிடுகின்றது. இதன் மூலம் திருமலையில் இருந்து மட்டக்களப்பை பிரிக்கலாம் எனத் திட்டமிடுகின்றது.

இதேபோன்று வெலிஓயாத் திட்டம் - மணலாறு - அரசாங்கத்தின் பிரதானதிட்டங்களில் ஒன்று. இத் திட்டத்தின் மூலம் திருமலை மாவட்டத்தை வடக்கில் இருந்து முற்றாக பிரிப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

ஆனால் இப்பகுதியைப் புலிகளின் பிடியில் இருந்து விடுவிக்கவேண்டியுள்ளது இதன் முயற்சியே ஒன்றன் பின் ஒன்றான மணலாற்றுப்படை எடுப்புக்கள் ஆகும். ஆனால் மணலாற்றை புலிகளிடம் இருந்து இலகுவில் மீட்க முடியாமல் உள்ளமை அரசாங்கத்தின் திட்டங்களுக்குப் பெரும் தடையாகவே உள்ளது.

இதை ஒத்ததகாவேவவுனியாவின் தென் மேற்கிலும் வவுனியா நகரப் பகுதியிலும் பெரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை சிறிலங்கா அரசாங்கம் தீவிரமாக்கியுள்ளது இதன் மூலம் வவுனியா நகரைச் சூழ சிங்களக் குடியேற்றங்களை அமைத்து நகரைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதோடு பிரதான போக்குவரத்துப் பாதைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுயற்சிக்கிறது அத்தோடு மன்னார்- மதவாச்சி பிரதான வீதிப்பகுதிக்கு செட்டிகுளம் பகுதியில் குடியேற்றங்களை நிறுவுவதன் மூலம் தெற்கிலுள்ள தமிழர் தாயகப் பகுதிகளை முழுமையாக கபளீகரம் செய்துவிட முடியும். மிகவும் குடியடர்த்தி குறைவான இப்பகுதியை வெகுசுலபமாக தமிழர் தாயகத்தில் இருந்து பிரித்துவிடுவது நோக்கமாகும்.

(2ஆம் பக்கம் பார்க்க)

ஜெயராஜ்

> இராணுவ அணுகு முறை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது என கடந்த 10 வருட அனுபவம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு உணர்த்தியுள்ளது. இந்நிலையில் சிங்கள குடியேற்றங்களையும், இராணுவ நடவடிக்கையுடன் இணைந்ததாக மேற் கொள்வதன் மூலம், சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் நேரடியாக மோதவிட சிறிலங்கா அரசாங்கம் எண்ணுகிறது.

நாட்டைக் காப்பதாகக் கூறும்

# அரசியல்வாதிகளின் பேச்சு வேடிக்கையானதாகவுள்ளது

- தொண்டமான்

(கண்டி)

''கடந்த ஐம்பது வருடங்களாக அரசியலில் ஈடுபட்டிருந்தும் மந்திரி சபையில் முக்கிய அமைச்சர் பதவிகளையும் வகித்தபோதும்கூட சிங்கள மக்களுக்காகவோ அல்லது இந்த நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டதாகவோ இல்லை, ஆனால் இன்று இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி ஆழ்ந்து நோக்கப்பட்டும், பேசப்பட்டுவரும் இவ்வேளையில் சிங்கள மக்களையும் நாட்டையும், காப்பாற்ற வேண்டுமெனக் கூறி இந்த அரசியல்வாதிகள் புறப்பட்டுள்ளமையானது வேடிக்கையாகவேயுள்ளது. அப்படியானால் இந்த அரசியல்வாதிகள் கடந்த ஐம்பது வருடகாலமாக என்ன சாதித்தனர் என்பதை மக்கள் முன்வைக்க வேண்டும்.''

இவ்வாறு இ. தொ. கா. தலைவர் அமைச்சர் தொண்டமான் இறக்குவானை நகரில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இன்று வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தத்தில் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களாக இருந்தாலும் சிங்களவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்நாட்டுப் பிரஜைகளே. இவ்வாறு இழப்புக்களைச் சந்தித்தபோதும் இதுபற்றிக் கவலைப்படுபவர்கள் இல்லை. தொடர்ந்தும் துவேஷத்தை வளர்த்து அரசியல் நடத்தவே விரும்புகின்றனர்.

இவைகளுக்கு முடிவு காண வேண்டுமென்பதற்காகவே இனப்பிரச்சினைக்கான தீர்வை முன் வைத்தேன்.

ஆனால் ''தொண்டமானும் ஒரு புலி'' என இன்று பிரசாரப்படுத்துகின்றனர்.

இவ்வாறு இனவாதத்தை வளர்ப்பவர்கள் சாதாரண மக்கள் அல்ல. உயர் மட்ட அரசியல் வாதிகளே இதனை ஏற்படுத்துகின்றனர். என்றும் தொண்டமான் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்

# 1991 ஓகஸ்ட் பரீட்சை புள்ளிகள் வந்து சேர்ந்தன

[யாழ்ப்பாணம்]

1991 ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து கொழும்பு சென்று பரீட்சை எழுதிய பாடசாலைப் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகள் யாழ். கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்துள்ளது

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளை அப் பாடசாலை அதிபர்கள் அல்லது ஆசிரியர்கள் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம் என யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (பா)

முதலாம் தவணை முடிவிற்குள்

# க. பொ. த. (சா/த) பரீட்சை முடிவுகள் வெளிவரும்

[கொழும்பு]

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த சாதாரணதரப் பரீட்சை முடிவுகளை முதலாந் தவணை பாடசாலை விடுமுறைக்கு முன்னர் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை பரீட்சைத் திணைக்களம் எடுத்து வருவதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

# வன்னிப் பிராந்தியத்திலும் இம்முறை முத்தமிழ் விழா

இன்னும் இரண்டு மாதங்களில் வன்னிப் பிரதேசத்தில் முத்தமிழ் விழா நடாத்தப்பட உள்ளது இந்த விழாவை மிகச்சிறப்பாக நடாத்துவதற்கு கலைஞர்கள், ஆய்வாளர்கள், அறிவுஜீவிகள், மாணவர்கள், ஆசிரியர் ஆகிய அனைத்து மக்களிடமிருந்தும் ஒத்துழைப்பை நாடுகின்றோம்.

மேற்கண்டவாறு தமிழீழ கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினத்துரை அவர்கள்வவுனியாவில் விடுத்த அழைப்புச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட முத்தமிழ் விழா போன்று வன்னிப் பகுதியில் இவ் விழாவை இம்முறை சிறப்பாக நடாத்துவதற்கு யோசித்திருக்கின்றோம்.

இவ்விழாமூலம், நாம் எமது மண்ணில் இன்றும் உறுதியாகவே இருக்கின்றோம் என்ற செய்தியை எமது எதிரிக்கும் உலகத்திற்கும் உணர்த்துவோம். என்று குறிப்பிட்ட அவர், மக்களை இந்த விழாவிற்கு தயாராகுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த விழாவையொட்டி வெளியிடப்படவிருக்கும் மலருக்காக எழுத்தாளர்களிடமிருந்து படைப்புகளை எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்த அவர், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மணலாறு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் சார்பாக இவ்விழா இரண்டு, அல்லது மூன்று நாட்கள் நடைபெற உள்ளது என்று குறிப்பிட்டார். (து)

### அரசாங்க

15 ஆயிரம் ஆசிரியர்களை சேவைக்கு சேர்த்துக் கொள்வது எனவும் இதில் 10,800 ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் கல்விச் சேவைகள் ஆணைக்குழு ஆரம்பித்து விட்டதெனவும் தெரிவித்தார்.

மிகுதி 4,200 பேரை சேர்த்துக் கொள்வதற்கான நிதியினை திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளபடுகின்றன.

கற்பித்தல் பாடங்களின் அடிப்படையில் சிலபகுதிகளில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை பற்றாக்குறையுள்ள பகுதிகளுக் இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

### ராணுவம்

இதேவேளை, இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பே மணலாற்றுச் சண்டையை இடையில் நிறுத்திப் பின்வாங்க வேண்டிய நிலையை இராணுவத்திற்கு ஏற்படுத்தியதாகவும் தெரியவருகின்றது.

மணலாற்றுத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மணலாறு சென்ற கொழும்புப் பத்திரிகையாளர் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் ஏற்பட்ட இழப்புக்களைத் தொடர்ந்து இராணுவம்குழம்பிய நிலையில் இருப்பதாகவும், அடுத்த கட்ட நடவடிக்கைபற்றி அவர்களிடம் தீர்மானம் எதுவும் அப்போது இருக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### இராணுவ சுற்றி

என்பவரை உலங்கு வானூர்தி மூலம் முகாம் கொண்டு சென்றனர். ஏனைய 12 பேரும் விடுதலை செய்யப்பட்டனர் அத்துடன் 15 சைக்கிள்களைபறித்துச் சென்றனர்.

இதேவேளை தட்டி முறிவில் சித்திரவேல் சரன் (22 வயது) என்பவர் கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன


### ராணுவ

பலியாகினர். மூன்று மாணவர்களும் இரண்டு ஆசிரியர்களும் காயமடைந்தனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### யாழ்,

அதி. வண. வியானி பெர்னாண்டோ, இலங்கை கத்தோலிக்க பொது நிலையின் சங்கத் தலைவர் திரு. நியூட்டன் பெர்னாண்டோ மற்றும் பிரவிடென்ட் சங்கத் தலைவியான அருட்சகோதரியும் இக்குழுவில் இடம்பெறுகிறார்கள்

இன்று பிற்பகல் இக் குழு கொழும்பு திரும்புகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.




கொக்கட்டிச்சோலை படுகொலை

# 53 இலட்சத்து 40 ஆயிரம் நட்டஈடு வழங்க சிபார்சு

(கொழும்பு)

கொக்கட்டிச் சோலையில் கடந்த ஆண்டு யூன் மாதம் நடாத்தப்பட்ட படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரிக்கவென நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை ஏற்றுக் கொள்வதெனஅமைச்சரவை தீர்மானித்துள்ளதென கலாசார தகவல் துறை அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொகுபண்டார தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் இறந்த, காயமடைந்தவர்களுக்கும், சொத்துக்களை இழந்தவர்களுக்கும் நட்ட ஈடாக மொத்தம் 53 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது.

படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவத்தினர் எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் எனவே இவர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது எனவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவர்கள் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடாத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை எதிர்காலத்தில் பொதுமக்கள்மீது வன்முறை பாவிக்கப்படுவதை தடுக்கப் பயன்பட வேண்டும். பொதுமக்கள்மீது எந்த நேரத்திலும் வன்முறையைப் பயன்படுத்தாமலிருக்க இராணுவத்தினருக்கு திட்டமான உத்தரவும், பயிற்சியும் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அன்னை பூபதி நினைவாக மட்டக்களப்பில் பந்தல்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கெடுபிடி மத்தியிலும் அன்னை பூபதியின் நினைவுதினம் சிறப்புற நடாத்தப்பட்டு வருகிறது நினைவு தினத்தை முன்னிட்டு அலங்காரபந்தல்களும்பதாதைகளும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் ரோந்து வரும் போது அவை பொதுமக்களால் அகற்றப்பட்டும் மீண்டும்அமைக்கப்பட்டும்வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது

சுற்றிவர இராணுவ முகாகள் உள்ள பகுதிகளிலும் அன்னை பூபதி அவர்கள் நினைவு கூரப்படுவது குறிப்பிடத் தக்கது

# பெற்றுக் கொள்ளவும்

திருநெல்வேலியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை விக்னேஸ்வரன் (672682479x) என்பவரது அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் ஒன்று சுன்னாகத்தில் இருந்து அருள்சந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

### அன்னை

சிறிலங்கா அரசுகளின் இணைந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தமிழீழத்தை அழித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஆக்கிரமிப்பையும் அடக்குமுறையையும் எதிர்த்து அகிம்சைப்போர் நடாத்தி தியாக மரணமடைந்த அன்னை பூபதி ஆக்கிரமிப்புக்கு எதிரான புரட்சிப் புயல் என்று வர்ணித்தார்.

மாலை 7.30 மணியளவில் ஆரம்பமான இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி மதிவாணி, வலி.மேற்கு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளையவன், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு தேவர் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

நேற்றுக் காலை 8-00 மணி முதல் 4-00மணி வரை இதே மைதானத்தில் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப் பட்டது இதில் நூற்றுக் கணக்கான மக்கள் பங்கெடுத்தனர். (க)


யாழ். மாநகர சபை

## சனசமூகநிலையங்களுக்கு

நாளை 28-03-92 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபைப் பிரிவுக்குள் இயங்கும் எல்லா சனசமூக நிலையங்களின் தலைவர்களையும் செயலாளர்களையும் தவறாது பங்கு பற்றும் படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

உள்ளூராட்சி இலாகா,
யாழ்ப்பாணம்
92/03/26

சுந்தரம் டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்.

(சி/4108)



## தவறிவிட்டது

கமராவிற்குரிய CANON 177A பிளாஷ் (FLASH) யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்னர்.

அருச்சுனா
அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்

(சி/4109)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.